

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு

(1992-93)

(பத்தாவது பேரவை)

இருபதாவது அறிக்கை

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள் : 27-4-1993)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை-600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மழைக்கள் குழு
(1992-93)
(பத்தாவது பேரவை)

இரண்டாவது அறிக்கை

பிழைத் திருத்தப் பட்டியல்

பக்கம் (1)	பத்தி (2)	வரி (3)	பிழை (4)	திருத்தம் (5)
4	5	1	கா.ப. பட்டாபிராயள்	கா.ப.பட்டாபிராமன்
5	4	1	ஓவுஹர் வாய்ப்புத்	ஓவுஹர் வேலை வாய்ப்புத்
6	4	1	51-2-93	15-2-93
8	2	3	செயல்பாட்டிற்	செயல்பாட்டிரு
9	1	2	வரிசை பன்.	வரிசை என்.
	2	1	நீர்த்தேக்கத்த	நீர் தேக்கத்
	4	3	அமைக்கப்பட்டவீர்	அமைக்கப்பட்டவரும்
10	2	1	நகராட்டி	நகராட்சி
	2	2	மார்க்கட் மார்க்கட்டாக	மார்க்கெட் மார்க்கெட்டாக
	2	3	பிந்த	பிரிந்த
11	1	1	மீ தாரரிர்	மனிதாரரின்
	3	1	முழுவிய	ஒழுங்கு
14	4	3	ஏதார் சாதனமாக	தார் தளமாக
15	3	3	பூர்ப்புரை	பார்ப்பிரை
	4	1	பதல்ரை	பதிலரை
16	3	—	—	மனிதாரரின் பெயரும், முகவரியும்
	5	1-2	ஒப்புதல்தல்	ஒப்புதல்
		2	உலர்	உயர்
		3	அரன்மனை	அரண்மனை
17	2	3	பெறஉல்லை	பெறவில்லை
	3	5	நிலைகைக்கேற்ப	நிலைமைக்கேற்ப
18	4	1	மாணப்பாறையையும்	மணப்பாறையையும்
19	4	3	இக்கிராமத்த்தில்	இக்கிராமத்தில்
22	1	1	பதிலரை	பதிலரை
23	4	1	திரு.பஜ்ர்	திரு.பஜீர்
25	4	3	ஓவலர்களாக	அலுவலர்களாக
27	2	3	மாவட்டிம்	மாவட்டம்
	4	1	ஜர்க ம்	ஜர்களும்

(1)	(2)	(3)	(4)	(5)
28	7	1	தொசக	தொகை
29	4	6	அனிபுசன்	அனிபுடன்
	5	1	மஇவாரின் பெயரும் முமவரியும்	மஇதாரரின் பெயரும் முகவரியும்
		1	மஇவின் சிருக்கம்	மஇவின் சுருக்கம்
	6	1	குமூவின்	குமுவின்
30	6	1	சினமை	சினமலை
31	6	5	மேல்மாயஇக்கு	மேல்மாயஇருக்கு
32	—	—	குமுவின் பரிந்தரை எனபதை	தவிர்க்கவும்
37	2	8	தண்னிர்	தண்ணீர்
	4	1–2	செப்பபனிடப்பட்டு	செப்பனிடப்பட்டு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்.

பக்கம்.

1. குழு உறுப்பினர்கள் ... iii
2. அறிக்கை
3. இணைப்பு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

(பத்தாவது பேரவை).

மனுக்கள் குழு.

(1992-93)

(1992-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 15 ஆம் நாள் அமைக்கப்பெற்றது)

தலைவர்:

1. திரு. கா. ப. பட்டாபிராமன்

உறுப்பினர்கள்:

2. திரு. எஸ். ஜெயக்குமார்
3. திரு. எஸ். அண்ணாமலை
4. திரு. கே. சிங்காரம்
5. திரு. எஸ். சண்முகநாதன்
6. டாக்டர் ச. சுந்தரராஜ்
7. திரு. ஆர். முருகையா பாண்டியன்
8. திரு. சி. ஞானசேகரன்
9. திரு. ஆர். தங்கராசு
10. திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்
11. திரு. எஸ். ஆண்டித் தேவர்

செயலகம்:

திரு. செ.சு. ஜாவகிராமன்—செயலாளர்.

திரு. டி. சாலமன் ஜெயபால் இளைச் செயலாளர்

திரு. ஜெ. அப்துல் சத்தார்—சார்புச் செயலாளர்.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அறிக்கை


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு

(1992—93)

பத்தாவது பேரவை

இருபதாவது அறிக்கை

பெறுநர்

மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை,
சென்னை 600 009.

முன்னுரை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் நியமனம் செய்யப்பட்ட 1992-93-ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழு தனது இருபதாவது அறிக்கையினைப் பேரவைக்கு அளிப்பதில் பெருமை கொள்கிறது.

குழுவின் கூட்டங்கள்.

1992 செப்டம்பர் திங்கள் 21-ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களிலிருந்து மனுக்களைப் பெற்று பரிசிலிக்கலாம் என குழு முடிவெடுத்தது.

குழு எடுத்த முடிவிற்கிணங்க, மேற்கண்ட மூன்றுமாவட்டங்களில் பொது மக்களிடமிருந்து மனுக்களைப் பெறுவதற்கான விளம்பரம் மற்றும் செய்திக் குறிப்புகள் 12—10—1992-தேதிய சில நாளேடுகளில் வெளியிடப்பட்டன.

1993 ஜனவரித் திங்கள் 28-ஆம் நாள் திருச்சிராப்பள்ளியில் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூடத்தில் குழுக் கூட்டம் நடந்தது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. மா. சின்னசாமி (கரூர் தொகுதி), திரு. அ. பாப்பாசுந்தரம் (குளித்தலை தொகுதி) திரு. ஆ. அறிவழகன் (திருஷ்ணராயபுரம் தொகுதி), திரு. என். ஆர். சிவபதி, (தொட்டியம் தொகுதி) மற்றும் டாக்டர் ஜி. ஆர். மாலா (திருச்சிராப்பள்ளி-II தொகுதி) ஆகியோரும் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டனர்.

மாவட்ட ஆட்சித் தலைவர் குழுவை வரவேற்றார்.

விளம்பரங்கள் மற்றும் பத்திரிகைச் செய்தி மூலம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலிருந்து பெறப்பட்ட மனுக்களை அரசுத் துறைகளுக்கு அனுப்பி, அரசுத் துறைகளிடமிருந்து பெறப்பட்ட பதிலுரைகளை குழு ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது. சம்பந்தப்பட்ட மனுதாரர்கள் சாட்சியமளித்ததோடு, சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களும் விளக்கமளித்தனர்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலிருந்து மொத்தம் பெறப்பட்ட 494 மனுக்களில், 202 மனுக்கள் விதிகளுக்குப் புறம்பானதாக இருந்தமையால் நிராகரிக்கப்பட்டன. 34 மனுக்கள் உரிய நடவடிக்கைக்கென சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு, பதிலுரைகள் பெற்று மனுதாரர்களுக்கு அனுப்பி முடிக்கப்பட்டன. விளக்கம் கேட்டு அனுப்பப்பட்ட 258 மனுக்களில் 112 மனுக்களுக்கான விளக்கம் கிடைக்கப் பெற்றன. அவற்றில் 54 மனுக்களைத் தெரிவு செய்து குழு ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது. மனுக்களின் விவரங்களையும் துறைகளின் பதிலுரைகளையும், குழுவின் பரிந்துரைகளையும் இணைப்பில் காணலாம்.

குழு ஆய்வு செய்தவற்றில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சில மனுக்கள் மீதான பரிந்துரைகள் பின் வருமாறு:-

1. மனு எண் 5107: ஜெயங்கொண்டத்திலிருந்து வாரியங் காவல் கொளத்தூர் வழியாக வல்லம் வரை செல்லும் சாலையைச் சீர் செய்தல் பற்றியது.

ஆண்டிமடம் சட்டமன்ற உறுப்பினரும், மனுக்கள் குழு உறுப்பினரு மாகிய திரு. இரா. தங்கராசு அவர்கள் கூவத்தூரிலிருந்து பிரிந்து கொளத்தூர் வழியாக வல்லம் கிராமத்தை இணைக்கும் 9.6 கிலோ மீட்டர் தூரமுள்ள சாலையை தார்ச்சாலையாக மாற்றி சீரமைக்க வேண்டும் என்று கோரியிருந்தார்கள்.

மேற்படி சாலையை மேம்பாடு செய்து தார்ச்சாலையாக மாற்றி சீரமைக்க கிராம சாலைகள் (Rural Roads) திருச்சிராப்பள்ளி கோட்டத்தின் மூலம் முன் மொழிவுகள் ஒப்புதல் பெறப்பட்டு, நடப்பு நிதியாண்டில் வேலை நடைபெற உள்ளதாக ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் தமது பதிலுரையில் தெரிவித்திருந்தார்.

நேரில் விளக்கமளிக்கையில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்ட நிதியில் அந்தச் சாலை சீரமைக்கப்படும் என ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் தெரிவித்ததை குழு ஏற்றுக்கொண்டு, 1994 ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் இப்பணி முடிக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

2. மனு எண் 5003-ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டு மனை வேண்டி வந்துள்ள மனு.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டம், பூவாளூர் கிழக்கு கிராமத்தில் ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு இலவச வீட்டு மனை வேண்டி மனு ஒன்று வந்திருந்தது.

மேற்படி ஆதி திராவிடர்களுக்கு இலம் வழங்க, பூவாளூர் கிழக்கு கிராம மத்தில் புஞ்சை நிலம் கையகம்செய்ய பரிந்துரை செய்து, வரைவு விளம்பல் கருத் துருக்கள் அரசின் ஒப்புதலுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் அனுப்பப் பட்டுள்ளது. என்றும் அரசின் உத்தரவு எதிர்பார்க்கப்படுகிறது என்றும் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் தமது பதிலுரையில் தெரிவித்திருந்தார்.

இக்குறிப்பிட்ட பிரச்சினை, நிலம் கையகப்படுத்தும் சட்டம் 4(1) அறிக்கை குறித்தது. இது அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் கிடைத்த வுடன் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சியர் நேரில் குழு முன் கூறியதை குழு ஏற்றுக் கொண்டு, விரைவில் நடவடிக்கை எடுத்து மனைப்பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

3. மனு எண் 4680 - மீன் விற்பனைச் சந்தையை வேறு இடத்திற்கு மாற்றக் கோரி வந்துள்ள மனு.

திருச்சிராப்பள்ளி நகராட்சிக்குட்பட்ட கூனிபஜார், பீம நகரில் உள்ள மீன் விற்பனைச் சந்தையில், மீன் கழிவுகளை அகற்றாமல் அங்கேயே சாக்கடையில் விடுவதால், சுகாதாரக்கேடு, ஏற்படுவதோடு போக்குவரத்தும் பாதிக்கப்படுவதாக வந்திருந்த மனுவிற்கு, மீன் கடைகளிலிருந்து உண்டாகும் கழிவுகள் அவ்வப்போது அப்புறப்படுத்தப்பட்டு, அந்தப்பகுதி முழுவதும் ஃபினாயில் மற்றும் நீர்த்த சுண்ணாம்பு கொண்டு சுத்தம் செய்யப்பட்டு வருகிறது. என்றும் பொது மக்கள் நலன் கருதி பொது சுகாதார சட்டத்தின்படி தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவ்வப் போது கடைகள் அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன என்றும் திருச்சிராப்பள்ளி நகராட்சி ஆணையர் தெரிவித்திருந்தார்.

திருச்சிராப்பள்ளி II தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ஜி. ஆர். மாலாப் அவர்கள் இந்த மீன் சந்தை பற்றி பல்வேறு புகார்களைக் கூறினார் தாம் ஏற்கனவே இது குறித்து நகராட்சி ஆணையரிடம் புகார் செய்திருப்பதாகவும் கூறி, மேற்படி மீன் விற்பனைச் சந்தை அவ்விடத்திலிருந்து அகற்றப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அருகிலுள்ள காந்தி மார்க்கெட்டில் அவர்களுக்கும் இடம் ஒதுக்கித்தந்து பிரச்சினை குறித்த இடத்திலிருக்கும் மீன் விற்பனைச் சந்தை இரண்டு அல்லது மூன்று நாட்களில் அகற்றப்பட்டுவிடும் என திருச்சிராப்பள்ளி நகராட்சி ஆணையர் கூறியதை குழு ஏற்று இன்னும் ஒரு வார காலத்தில் அந்தக் கடைகள் அகற்றப்பட்டு விடும் என்று குழு நம்பிகறது. இது பற்றிய அறிக்கையை உடனடியாகக் குழுவிற்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று குழு விரும்புகிறது.

4. மனு எண். 4677 - பேருந்து வசதி வேண்டி வந்துள்ள மனு.

வி. துறையூர் கிராமத்திற்கு மெயின் கார்டு கேட் மற்றும் சமயபுரத்திலிருந்து பேருந்து வசதி அளிக்கக் கோரி வந்திருந்த மனுவிற்கு, மேற்படி வி. துறையூர் கிராமம் சமயபுரம் - மாடக்குடி வழித்தடத்திலிருந்து உட்புறமாக 1.0 கி. மீ. தொலைவில் உள்ளது என்றும் மேற்படி கிராமத்திற்கு பேருந்து வசதி செய்ய, சாலைத் தகுதி குறித்து திருச்சிராப்பள்ளி, நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித் துறை கோட்டப் பொறியாளருக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது என்றும், சாலைத் தகுதி குறித்துக் கடிதம் பெறப்பட்டவுடன் வி. துறையூர் கிராமத்திற்கு பேருந்து வசதி செய்து தரப்படும் என்றும் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் தமது பதிலுரையில் தெரிவித்திருந்தார்.

நேரடி சாட்சியத்தின் போது, தகுதிச் சான்றிதழ் கூட கொடுத்து விட்டதாக மனுதாரர் சொன்னதால், உடனடியாகப் பேருந்து விடலாம் என தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் தெரிவித்தார். குழுவிடம் தெரிவித்தபடி, மேற்படி வழித்தடத்தில் பேருந்து இயக்கப்பட்டுவிடும் என்று குழு நம்புகிறது. இதனை உறுதி செய்து ஓர் அறிக்கையினை உடனடியாகக் குழுவிற்கு அனுப்பிவைக்க வேண்டுமென்று குழு விரும்புகிறது.

5. மனு எண் 4909 - பாதாள சாக்கடை நீர் அருகிலுள்ள கோரை யாற்றில் கலப்பது குறித்து வந்துள்ள மனு.

திருச்சிராப்பள்ளி புதை வடிகால் திட்டம் பஞ்சப்பூரில் கழிவு நீர்ப் பண்ணையில் பாதாள சாக்கடை கழிவு நீர் அதன் அருகிலுள்ள கோரையாற்றில் கலப்பது குறித்து மனு ஒன்று வந்திருந்தது.

திருச்சிராப்பள்ளி நகராட்சி புதை வடிகால், திட்டத்தின் மேற், திருச்சிராப்பள்ளி பஞ்சப்பூர் கழிவு நீர் தொட்டியிலிருந்து வெளியேறும் அதிகப் படியான கழிவு நீராவது அருகிலுள்ள கோரையாற்றில் கலக்காமல் இருக்க தற்போது சுமார் 10 ஏக்கர் பரப்பளவில் புல் பண்ணை அமைக்கப்பட்டு கோ. 1- புல் பயிர் செய்யப்பட்டு, அக்கழிவு நீரானது புல்பண்ணை பராமரிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. என்றும், அது தவிர கூடுதலாக மேலும் 15 ஏக்கர் பரப்பளவில் புல் பயிரிடவும் நகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. என்று திருச்சிராப்பள்ளி நகராட்சி ஆணையர் தமது பதிலுரையில் தெரிவித்திருந்தார்.

நேரில் சாட்சியமளிக்க வந்திருந்த மனுதாரர் கோரையாற்றிலிருந்து கொண்டு வந்த ஒரு பாட்டில் நீரை குழுவிற்குச் சமர்ப்பித்து, அருகிலுள்ள காளையார் கோயிலுக்கு வரும் பக்தர்கள் அதில்தான் குளிக்கின்றார்கள் என்றும் அந்தப்பகுதி மக்கள் குடிப்பதற்கும், சமையலுக்கும் அந்த நீரை பயன்படுத்தி வருகிறார்கள் என்றும் கூறினார்.

அது கழிவுநீர் வாய்க்கால் தான் எனவும், அந்தத் தண்ணீரை யாரும் குடிப்பதாகத் தெரியவில்லை. என்றும் மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

கோரையாற்றில் கழிவுநீர் கலக்காமல் இருக்கும்படி செய்யும் ஒரு திட்டத்தைச் செயல்படுத்த அதிக செலவாகும் என்பதால் அந்நீரைக் குடிப்பதற்கும், சமையலுக்கும் பயன்படுத்த வேண்டாம் என்னும் அந்தத் தண்ணீரைக் குடித்தால் ஆபத்து ஏற்படும் என்றும், அறிவிப்புப் பலகை ஒன்றைத் தமிழில் எழுதி அவ்விடத்தில் பொருத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

6. மனு எண் 4649-குடிநீர் வசதி வேண்டி வந்துள்ள மனு.

திருச்சிராப்பள்ளி, சுப்பிரமணியபுரம், அருளாநந்தர் தெருவில் குடிநீர் குழாய்கள் பதிக்கப்பட்டு குடிநீர் விநியோகம் வேண்டியும் கட்டிமுடிக்கப்பட்ட தெருக்குழாய்களுக்கு குடிநீர் இணைப்பு வேண்டியும் வந்திருந்த மனுவிற்கு, நகராட்சிக்கு உட்பட்ட அனைத்து தெருக்களுக்கு குழாய்கள் பதிக்க 71 மீட்டர் தூரம் எடுத்துக் கொண்டு, அதில் 41 மீட்டர் தூரத்திற்கு குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளதாகவும் எஞ்சிய பகுதிகளுக்கு, குழாய்கள் பதிக்க, அரசிடம் நிதி உதவி கோரி கருத்துரு அனுப்பியுள்ளதாகவும் நிதி உதவி கிடைக்கப் பெற்றவுடன் நகராட்சிகளுக்குட்பட்ட அனைத்து தெருக்களுக்கும் குழாய் பதிக்கும் பணி முடிவடையும் எனவும் மேலும் கட்டி முடிக்கப் பட்ட இணைப்புகளுக்கு குடிநீர் இணைப்பு விரைவில் வழங்கப்படும் எனவும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினர் தெரிவித்துள்ளதாக பொன்மலை நகராட்சி ஆணையர் தமது பதிலுரையில் தெரிவித்திருந்தார்.

மேலும், குழு முன் நேரில் விளக்கமளிக்கையில் பம்பு வருவதற்கு இன்னும் ஆறு மாத காலம் ஆகும் எனவும் 1993 டிசம்பர் திங்களுக்குள் முடித்துக் கொடுப்பதாகவும் அது வரையில் காலையிலும் மாலையிலும் லாரி மூலம் தண்ணீர் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்படும் எனவும் பொன்மலை நகராட்சி ஆணையர் கூறியதை குழு ஏற்றுக்கொண்டு காலையிலும் மாலையிலும். அப்பகுதி மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய வேண்டும் என்றும் 1993 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களுக்குள் குழாய்கள் பதிக்கப்பட்டு, குடிநீர் விநியோகிக்கப்பட வேண்டும்என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

2—4—1993 ஆம் நாளன்று நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் இவ் அறிக்கைக்கு குழு தனது ஒப்புதலை அளித்தது.

தலைமைச் செயலகம்,
சென்னை—600 005
நாள்: 2—4—1993
ஆங்கிரச பங்குனி 20,
திருவள்ளுவர் ஆண்டு 2024.

கா. ப. பட்டாபிராமன்,
தலைவர்,
மனுக்கள் குழு.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
1	5106	திரு. இரா. தங்கராசு, சட்டமன்ற உறுப்பினர், ஆண்டிமடம்.	செந்துரை முதல் குழுமூர் வரை செல்லும் 8.0 கி.மீ. நீளமுள்ள சாலையை சீர் செய்தல்.

பதிலுரை விளக்கம்.
(5)

செந்துறை-குழுமூர் சாலை (கி.மீ. 0/0-8/2) 8.2 கி.மீ. நீள முள்ள இக்கோட்டத்தைச் சார்ந்த மாவட்ட சாலையாகும். இச் சாலையில் கி.மீ. 1/0-8/1 வரை சீர் செய்ய வேண்டியப் பகுதி யாகும். இதில் கி.மீ. 1/0-6/0 முடிய ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு விரைவில் வேலை தொடங்கப்படவுள்ளது. மீதமுள்ள (6/0-8/2) 2.2 கி.மீ. நீளமுள்ள சாலையையும் சீர்செய்ய தலைமைப் பொறியாளர் (நெ.ஊ.ப.), சென்னை அவர்களின் செயல்முறைக் கடித எண். 20460/வி.எஸ்./1-92-31) நாள்: 27.10.1992 மூலம் உத்தரவு பெறப்பட்டு மதிப்பீடு கண்காணிப்புப் பொறியாளர்(நெ.ஊ.ப.) திருச்சிராப்பள்ளி அவர்கட்கு சமர்ப்பிக்கபட்டுள்ளது. எனவே சாலையின் சீர் செய்ய வேண்டிய மொத்தப் பகுதியும் தற் போது சீர் செய்ய எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

குழுவின் பரிந்துரை.
(6)

கோட்டப் பொறியாளர் கூறியதையொட்டி மேற்படி சாலை முழுவதும் 31-3-1993ம் தேதிக்குள் மேம் பாடு செய்யப்பட்டுவிடும் என்று குழு எதிர்பார்க் கிறது.

(நெடுஞ்சாலை கோட்டப் பொறியாளரின் கடித எண்ணும் தேதியும்: 14039/92/வ4, நாள்: 4-12-1992.)

வரிசை எண். (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
2	5107	திரு. இரா. தங்கராசு, சட்டமன்ற உறுப்பினர், ஆண்டிமடம்.	ஜெயங்கொண்டத்திலிருந்து வாரியங்காவல் கொளத் தூர் வழியாக வல்லம் வரை செல்லும் சாலையை சீர் செய்தல்.

துறையின் பதிலுரை.
(5)

கூவத்தூர்-வல்லம் சாலை, ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தின் எல்லைக்குட்பட்ட ஒன்றிய சாலையாகும். கூவத்தூரிலிருந்து பிரிந்து கொளத்தூர் வழியாக வல்லம் நிராம்தை இணைக்கும் இச்சாலையின் மொத்த நீளம் 9.6 கிலோ மீட்டர். மேற்படி சாலையை மேம்பாடு செய்து தார்ச்சாலையாக மாற்றி ரோ மைக்க நிராம சாலைகள் (Rural Roads), திருச்சிராப்பள்ளி கோட்டத்தின் மூலம் முன் மொழிவுகள் ஒப்புதல் பெறப்பட்டு நடப்பு நிதியாண்டில் வேலை நடைபெற உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குழுவின் பரிந்துரை.
(6)

ஜவஹர் வாய்ப்புத் திட்ட நிதியில் அந்தச் சாலை சீரமைக்கப்படும் என ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் தெரிவித்ததை குழு ஏற்றுக் கொண்டு 1994 ஆம் ஆண்டு மார்ச் திங்களுக் குள் இப்பணி முடிக்கப்பட வேண்டும் என்று பரிந் துரை செய்கிறது.

(ஆண்டிமடம் ஊராட்சி மன்ற ஆணையர் கடித எண்ணும் தேதியும்: ஒ.மு. 9251/92, நாள் 15-12-1992.)

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
3	4921	திரு. பொன்னுசாமி /பெ. சங்கரன் (சக்கிலிய குடிகள் சார்பாக) நாவலூர்-குட்டப்பட்டு, திருச்சிராப்பள்ளி-620 009.	திருச்சிராப்பள்ளி வட்டம், நாவலூர்-குட்டப்பட்டு கிராமத்தில் 30 ஆதிதிராவிட சக்கிலிய குடும்ப பங்கள் குடியிருக்க இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கக் கோருதல்.

துறையின் பதிலுரை.
(5)

திருச்சிராப்பள்ளி மாவட்டம் மற்றும் வட்டம் நாவலூர்-குட்டப்பட்டு கிராமத்தில் இருக்கும் 30 சக்கிலிய ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு இலவச மனை பட்டா வழங்குவதற்கு இந்த கிராமத்தில் 0.45.0 ஹெக்டேர் நிலம் கையகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிலம் கையகச் சட்டம் பிரிவு 4(1)-ன் கீழான வரைவு விளம்பல் கருத்துக்கள் 10-12-1992-க்குள் அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும்.

குழுவின் பரிந்துரை.
(6)

மாவட்ட ஆட்சியர் உறுதிமொழியை குழு ஏற்று, இது குறித்த நிலம் கையகப்படுத்தும் வகையில் நிலச் சொந்தக்காரரிடமிருந்து கன்சென்ட் கடிதம் பெற்றுக் கொண்டு என்ட்ரி அபான் திலேன்ட் என்ற முறையில் நடவடிக்கையெடுத்து அது பற்றி மாவட்ட ஆதி திராவிட நல அலுவலர் குழுவிற்கு அறிக்கையினை மாவட்ட ஆட்சியர் மூலமாக 15 நாட்களுக்குள் அனுப்புவார் என்று முழு எதிர்பார்க்கிறது.

(கடிதம் எண்ணும் தேதியும்: ந.க.ய.6/124238/91, நாள்: 27.11.1992.)

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் சுருக்கம்.
(1)	(2)		(4)
4	5082	திரு. மு. மகராசன், முன்னாள் தலைவர், மேமாளிகை ஊராட்சி, அரியலூர் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	அரியலூர் வட்டம், மேல மாளிகை கிராமத்தில் ஆதி திராவிடர்களுக்கு 1980-ம் ஆண்டில் வழங்கிய மனைப்பட்டாக்களை அளந்து பிரித்துக் தரவும் நடப்பு நிதி ஆண்டில் வீடுகள் கட்டித் தரவும் கோருதல்.

துறையின் பதிலுரை.
(5)

வீட்டு மனைகளை அளந்து தர நடவடிக்கை எடுத்து அறிக்கை அனுப்பி வைக்குமாறு அரியலூர் ஆதி திராவிடர் நல தனி வட்டாட்சியருக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. அவரது அறிக்கையைப் பெற்று விரிவான அறிக்கை அனுப்பி வைக்கப்படும் என்பதை தெரிவிக்கப்படுக்கிறது.

குழுவின் பரிந்துரை.
(6)

மாவட்ட ஆட்சியர் கூறியதையொட்டி, 51-2-1993-க்குள் இடத்தை அளந்து ஒதுக்கீடு செய்யப்பட்டு விடும் என்று குழு நம்புகிறது.

(கடிதம் எண்ணும் தேதியும்: ந.க.ய.11/119655.92, நாள்: 14-12-1992)

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
5	5003	திரு. சுப்பிரமணி த/பெ. மூக்கன், 8, பெரியார் தெரு, பூவாளூர் அஞ்சல், லால்குடி வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம் பூவாளூர் கிழக்கு கிராமத்தில் பெரியார் தெருவில் வசித்துவரும் இந்து-ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு இலவச வீட்டு மனைக்காக நிலம் கையகம் செய்து வழங்க அரசுக்கு பரிந்துரை செய்யக் கோருதல்.

துறையின் பதிலுரை.
(5)

இவர்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்காக பூவாளூர் கிழக்கு கிராமத்தில், புல எண். 9/5 மற்றும் 9/6ல் 0.63.0 ஹெக்டேர் புஞ்சை நிலம் கையகம் செய்ய பரிந்துரை செய்து திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ய6/124236/91, நாள்: 6—11—1992-ல் நிலம் கையகச் சட்டப் பிரிவு 4 (1)-ன் கீழான வரைவு விளம்பல் கருத்துருக்கள் அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அரசின் உத்திரவு எதிர்பார்க்கப்படுகிறது.

(கடித எண்ணும் தேதியும்: ந.க.ய6/124236/91, நாள் 25—11—1992)

குழுவின் பரிந்துரை.
(6)

விரைவில் நடவடிக்கை எடுத்து மனைப்பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)
6	4968	திரு. கே. பி. ராமு, (த/பெ.) பொன்னாண்டன், அம்பலக்காரன், கொளக்குடிப்பட்டி, கொளக்குடி, முசிறி வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

துறையின் பதிலுரை.
(5)

முசிறி வட்டம், கொளக்குடி கிராமத்தில் புல எண். 553/4, 5ஏ, 5பி, 6அ, 6அ 2, 6பி, முதலான புல எண்களில் 2.12.5 ஹெக்டேர் புன்செய் நிலத்தினைக் கையகம் செய்ய பிரிவு 4(1)ன் கீழ் அரசு ஆணை எண். 3டி. நெ. 27 நாள் 27—3—1991ல் அங்கீகரிக்கப்பட்டு தனி வட்டாட்சியரால் 5ஏ விசாரணை மேற்கொள்ளப்பட்டது. பிரிவு 6ன் கீழ் வரைவு உறுதி அறிக்கை அரசு ஆணை எண். 3டி நெ. 77 நாள் 6—3—92ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாணை 25—3—1992ம் தேதிய தமிழ்நாடு அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் அதில் தவறு உள்ளதால் பிழைத்திருத்தம் அனுப்பப் பட்டு அது 13—11—1992ல் அரசால் ஒப்புதல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதில் நில முன்மதிப்பீட்டுப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் 23—6—1992ல் அங்கீகரிக்கப்பட்டு விட்டது. இதில் பிரிவு 7ன் கீழ் வரைவு கட்டளை முசிறி நிலவகைத்தோர் தனி வட்டாட்சியரிடம் இருந்து பெற்று அரசுக்கு அனுப்ப வேண்டும். இதில் தரித நடவடிக்கை மேற்கொண்டு ஜனவரி 1993ல் அவார்டு விசாரணை மேற்கொண்டு பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

(கடித எண்ணும் தேதியும்: பா4 11015/90, நாள் 24—11—1992)

மனுவின் சுருக்கம்
(4)

முசிறி வட்டம், கொளக்குடி கிராமத்தில் புல எண்கள் 553/4, 5ஏ முதலான புல எண்களில் 100 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனை வழங்க நிலம் கையகப்படுத்தி, இதுவரையில் மனைகள் பிரித்து பட்டா வழங்காமல் உள்ளது. மனை ஒதுக்கி பட்டா கிடைக்க ஆவன செய்யக் கோரல்.

குழுவின் பரிந்துரை.
(6)

31—3—1993க்குள் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவிடும் என குழு நம்புகிறது. பிரச்சினை முடிவுற்றதும் அது குறித்து குழுவிற்கு தெரிவிக்க வேண்டும்.

வரிசை எண்: (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)
7	4675	திரு. மு. சாமிநாதன் கயர்லாபாத் கிராமம் லிங்கத்தடிமேடு (அஞ்சல்), அரியலூர் வட்டம்.

மனுவின் சுருக்கம்
(4)

அரியலூர் வட்டம் கயர்லாபாத் கிராமத்தில் வீடு இல்லாமல் இருக்கும் ஏழை விவசாயிகள் 100 குடும்பங்களுக்கு இலவச வீடும் / வீட்டு மனைப் பட்டாவும் வழங்கக் கோருதல்.

துறையின் பதிலுரை.

(5)

அரியலூர் வட்டம் கயர்லாபாத் கிராமம் லிங்கத்தடிமேடு கிராமத்தைச் சேர்ந்த 73 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு வீட்டு மனை வழங்க நில ஆர்ஜிதப் பிரிவு 4(1)ன் கீழான வரைவு அறிக்கையினை அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அரசின் ஆணை கிடைக்கப்பெற்றதும் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

(கடித எண்ணும் தேதியும்: ந.க.டி11 119655/92.)

குழுவின் பரிந்துரை.

(6)

கூடிய விரைவில் பட்டா கொடுக்கிறோம் என்று மாவட்ட ஆட்சியர் கூறியதை குழு ஏற்றுக் கொள்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
8	4684	திரு. எஸ்.எஸ். ரஹமத்துல்லா, பி.ஏ., செயலாளர், இளைஞர்கள் நாட்டு நலப்பணித் திட்டம், 8|2.41, திருப்பூர் குமரன்ரோடு, அரியமங்கலம், திருச்சிராப்பள்ளி-620 010.	அரியமங்கலம் பேரூராட்சி '' ஆலத்தூர் கூட்டு குடிநீர் திட்டம்'' தொடர்பாக ஆயில் மில் மலையப்ப நகர் பகுதியில் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி கட்டுவதில் அப்பகுதியில் இரு கோஷ்டிகளிடையே மோதல் நடப்பதால் நீர்த் தேக்கத் தொட்டி அமைக்குமிடம் பிரச்சினைக்குரியதாக இருக்கிறது. இதன் காரணமாக இத்திட்டம் நிறைவேற்றப் படாமல் இருந்து வருகிறது. இந்த நீண்ட கால குடிநீர் பிரச்சினையை விரைவில் செயல்பாட்டிற்கொண்டு வர கோருதல்.

துறையின் பதிலுரை.

(5)

அரியமங்கலம் பேருராட்சியில் கூட்டு குடிநீர் திட்டத்தின்கீழ் நான்கு இடங்களில் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி கட்டி முடித்துக் குடிநீர் வழங்க ரூபாய் ஒரு கோடியே நாற்பது இலட்சம் செலவில் திட்டம் அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. முதல் மூன்று தொட்டிகளின் பணிகள் 75 சதவீதம் முடிந்துவிட்டன. மலையப்பநகர் பகுதியில் மேல்நிலை நீர்த் தேக்க தொட்டி கட்டப்படும் அடிமனை பகுதிக்குக் கோர்ட்டில் தடையாணை பெற்றிருக்கிறார்கள். தடையாணையை நீக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குழாய்கள் பதிக்கும் பணிகள் 75 சதவீதம் முடிந்துவிட்டன. இந்த நான்கு தொட்டிகளில் ரயில் நகர் பகுதியில் வேலைகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. ஜெகநாதபுரம் மற்றும் அரியமங்கலம் இரு பகுதிகளிலும் இன்னும் வேலை தொடங்கப்படவில்லை.

குழுவின் பரிந்துரை.

(6)

தடையாணை பெற்ற இடத்தில் மேல் நிலைத் தொட்டி கட்டுவதற்கு சாத்தியமில்லை என்றால் வேறு இடத்தில் கட்டிக் கொடுக்க தக்க நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் எடுக்க வேண்டும் என்று குழு கருதுகிறது.

(கடித எண்ணும் தேதியும்: ந.க. 7309/92 பெ4 நாள் 29-12-1992.)

58-488—5

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
9	4693	பொதுமக்கள், வேலூர் அஞ்சல், பெரம்பலூர் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	வேலூர் கிராமத்திற்கு நீர்த்தேக்கத்த தொட்டி தேவை குறித்து.

துறையின் பதிலுரை.
(5)

மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள வேலூர் கிராமத்தில் தற்பொழுது போதுமான குடிநீர் வசதி உள்ளது. 1985 ஆம் ஆண்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு (மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டாமல்) பகிர்மானக் குழாய் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. திட்டத்தில் உள்ள மீதப்பணிகள் நிர்ப்பந்தக் காரர் நீதிமன்றம் சென்றதால் தடைப்பட்டது. தற்சமயம் அப்பணி களை முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 92/93 நிதி ஆண்டில் சேர்க்கப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி திட்டம் கூடிய விரைவில் முடிக்கப்படும்.

வேலூர் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பணியை செய்துமுடிக்காத ஒப்பந்தக்காரர்மீது தக்க நடவடிக்கை எடுத்து, அதனை குழுவிற்கும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் தெரிவிக்க வேண்டும் என்று குழு கருதுகிறது.

(கடித எண்ணும் தேதியும்: 5906/28 கோ. மா. எ. நாள் 18-1-1993.)

குழுவின் பரிந்துரை.
(6)

வரிசை எண். (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும். முகவரியும். (3)	மனுவின் சுருக்கம், (4)
10	4688A	திரு. அ. கோபாலன், பொதுமக்களுக்காக. பிரம்மதேசம் அஞ்சல், வாலகண்டாபுரம் (வழி), பெரம்பலூர் வட்டம்.	திருச்சிராப்பள்ளி மாவட்டம், பெரம்பலூர் வட்டம் பிரம்மதேசம்—எலம்பலூர் வரை இணைப்புச் சாலை அமைத்தல்.

துறையின் பதிலுரை.
(5)

பொருளில் குறிப்பிட்டுள்ள சாலை தேசிய நெடுஞ்சாலை கூ.ம. 261/2இல் பிரிந்து எலம்பலூர் செல்லும் அரசு இதர மாவட்ட சாலையில் கி.மீ. 0/8இல் இருந்து (பிரிந்து) ஆரம்பமாக செல் கின்றது. இச்சாலை பிரம்ம தேசம் வரை செல்லும். இச் சாலையின் மொத்த நீளம் 3.20 கி.மீ. இச் சாலை (0.6)-ல் 0.6 கி.மீ. நீளம் பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியப் பராமரிப் பிலும், மீதமுள்ள 2.60 கி.மீ. வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றிய பராமரிப்பில் இருந்துவரும் இனம் பிரிக்கப்படாத மண் சாலையாகும்.

இச்சாலையின் சீரமைப்புப் பணி வேறு எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை. இச் சாலையை தார்ச்சாலை வரை சீரமைக்க தோராயமாக ரூபாய் 12.80 லட்சம் தேவைப்படும்.

இப் பணியை ஊராட்சி ஒன்றியத்தில் செயல்படுத்தப்படுகின்ற தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் எடுத்துச் செயல்படுத்தலாம்.

உதவி கோட்டப் பொறியாளர் உறுதிமொழியை குழு ஏற்று விரைவில் நிலத்தை கன்சென்ட் கடிதம் மூலம் பெற்று இணைப்புச்சாலை அமைக்கப்பட்டுவிடும் என்று குழு நம்புகிறது.

(கடித எண்ணும், தேதியும், 15308/92-வ1, நாள் 11-1-1993.)

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம் (4)
11	4680	திரு. எஸ்.வி. தனக்கோடி, 13/ரி, எம்.எம் டி. ஸ்டோர் கூனி பஜார், பீமநகர், திருச்சிராப்பள்ளி-1.	திருச்சிராப்பள்ளி நகராட்சிக்கு உட்பட்ட கூனி பஜார், பீமநகரில் உள்ள மீன் மார்க்கட் நடத்துவதை தடுத்து இந்தக் கடைகளை வேறு பகுதிக்கு மாற்ற கோருதல் மீன் கழிவுகள் சிதறி உள்ளன இதனால் நோய் பரவு கின்றன சுகாதாரம் சீர்கெட்டு உள்ளது.

துறையின் பதிலுரை.
(5)

கூனி பஜார் பீமநகர் இடத்தில் அமைந்துள்ளதாக கூறப்படும் மீன் மார்க்கட் மார்க்கட்டாக நடைபெறவில்லை. கடைகளிலிருந்து பிந்து உண்டாகும் கழிவுகளை அவ்வப்போது அப்புறப்படுத்தப் பட்டு அந்தப்பகுதி முழுவதும் பினாயில் மற்றும் நீர்த்த சுண்ணாம்பு கொண்டு சுத்தம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், பொது மக்கள் நலன் கருதி பொது சுகாதார சட்டத் தின்படி தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு அவ்வப்போது கடைகளை அப்புறப்படுத்தி வருகிறது என்ற விபரத்தையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

குழுவின் பரிந்துரை
(6)

திருச்சிராப்பள்ளி நகராட்சி ஆணையர் கூறியதை குழு ஏற்று இன்னும் ஒருவார காலத்தில் அந்தக் கடைகள் அகற்றப்பட்டுவிடும் என்று குழு நம்புகிறது.

(கடிதஎண் எச். 3/50959/92, நாள் 9—1—1993.)

வரிசை எண். (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
12	4671	திரு. வி. வைரபெருமாள், பி.எஸ்.எஸ், நகர செயலாளர் மற்றும் மாவட்ட பிரதிநிதி, உப்பிலியாபுரம், துறையூர் வட்டம்.	திருச்சிராப்பள்ளி மாவட்டம் துறையூர் வட்டத்தில் உள்ள உப்பிலியாபுரம்-கோட்டப்பாளையம் மெயின் ரோட்டின் குறுக்கே தழுகை ஆற்றில் பாலம் கட்டுதல்

துறையின் பதிலுரை.
(5)

பாலம் கட்டக் கோரும்இடம் திருச்சிராப்பள்ளி நெடுஞ்சாலைக் கோட்ட பராமரிப்பில் இருக்கும் உப்பிலியாபுரம்-கோட்டப் பாளையம் சாலையில் கி மி 1.4 ஆகும். இவ்விடத்தில் ஆற்றின் நீர்வழிப்பாதை 53.5 மீட்டர் இவ்விடத்தில் கண்கள் கொண்ட தாம்போகி அமைக்க தோராயமாக ரூ. 16.05 லட்சம் தேவைப்படுகிறது.

இத்திட்டத்தை பகுதி-2 திட்டம் 1994—95 பிரேரணையில் சேர்த்து சிபாரிசு செய்யும்படி தலைமைப்பொறியாளர் தெ.ஊ.ப.ண அவர்கள் கு.எண்.சி.ஆர். (3 வருடங்கள்)/536320 திட்டம்-3/92-1, நாள் 25—9—1992-ல் அறிவுரை வழங்கியுள்ளார்.

ஆகையால் அடுத்த ஆண்டு பகுதி-2 திட்டத்தில் மேற்படிதழுகை ஆற்றில் பாலம்கட்ட பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனுவின் சுருக்கம்.
(6)

இந்தத்திட்டம் குறித்து தலைமைப் பொறியாளருக்கு கடிதம் எழுதப்பட்டு, உடனடியாக இந்தப்பாலம் கட்டப்பட வேண்டும் என்று குழு வலியுறுத்து கிறது.

(க. எண் 765/93—வ 1, நாள் 22—1—1993)

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
13	4654	திரு. ஜி. எஸ். இனிலாக சர்மா, 23, ராமகிருஷ்ணா நகர், திருச்சிராப்பள்ளி-20.	பொது சுகாதாரம்—ராமகிருஷ்ணாநகர் கழிவுநீர் வாய்க்கால்-சீர்திருத்தம் செய்து தரக்கோருவது தொடர்பாக.

துறையின் பதிலுரை. (5)

திருச்சிராப்பள்ளி ராமகிருஷ்ணா நகர் எல்லையில் ஓடும் சாக்கடை பொன்மலை நகராட்சியை சார்ந்தது. திருச்சிராப்பள்ளி நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள குப்பைகள் மற்றும் சாக்கடைமண் ஆகியவைகள் அப்புறப்படுத்தப்பட்டு உள்ளது. மேலும் சாக்கடையில் தண்ணீர் தேங்காவண்ணம் சுத்தம் செய்துதொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது என்ற விவரத்தையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(கடித எண். எச். 3|2074|93, நாள் : —1—1993.)

முழுவின் பரிந்துரை. (6)

ஒரு மாத காலத்திற்குள் சாக்கடை பல இடங்களில் முழுவதுமாக கட்டி முடிக்கப்படாதது தண்ணீருடன் மண்ணும் சேர்ந்து கழிவுநீர் ஓடாத குறைகளை நிறைவு செய்யப்பட்டுவிடும் என்றும் ஆணையர் கூறியதுபோல அடுத்த பட்ஜெட்டில் 1—4—1993-க்கு மேல் முழுவதுமாக சுத்தம் செய்யப்பட்டுவிடும் என்று குழு எதிர் பார்க்கிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
14	4648	திரு. கே. ஏ. நவாப் ஜான். காட்டுப்புத்தூர் திருச்சி மாவட்டம்.	முசிறி வட்டம், காட்டுப்புத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்றி பெண் மருத்துவரை நியமித்து மக்களுக்கு பயன்தருமாறு ஆணை வழங்க கோரியுள்ளார்.

துறையின் பதிலுரை. (5)

காட்டுப்புத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 3 உதவி மருத்துவர்கள் பணிபுரிந்து மக்களுக்கு தேலையான உயிர்காக்கும் மருந்துகள் வழங்கப்பட்டு வருகிறது. காட்டுப்புத்தூரில் ஆரம்ப சுகாதார நிலையமாக இயக்கினால்தான் கீழ்காணும் களப்பயன்களையும் மக்கள் முழுமையாக பெற இயலும்.

இச்சுகாதார நிலையத்திற்கு 7 துணை நிலையங்கள் இணைக்கப்பட்டு கிராம சுகாதார செவிலியர்கள் மூலமாக அந்தந்த கிராமங்களிலேயே பிரசவ வசதி, தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கை, முத்தடுப்பு ஊசி, காலரா தடுப்பு நடவடிக்கை போன்ற பயன்கள் மக்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். பெண் மருத்துவர் நியமனம் குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(கடித எண்ணும் தேதியும் : ந.க. எண். 14377|அ5|92, நாள் : 27—1—1993.)

முழுவின் பரிந்துரை. (6)

மனுதாரர் வரவில்லை. துறையின் பதிலுரை பதிவு செய்யப்பெறுகிறது.

வினா எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
15	5506	திருமதி சீ. பூங்கோலம்மாள், அமைப்பாளர், மகளிர் மன்றம், திம்மாச்சிபுரம் அஞ்சல், குளித்தலை வட்டம், திருச்சி மாவட்டம், அஞ்சல் குறியீடு எண். 639 105.	மனுவின் சுருக்கம் : திருச்சி மாவட்டம்-புதுக்கோட்டை (நெடுஞ்சாலை) கோட்டம்-நாகப்பட்டினம்-கூடலூர் மைசூர் (மாநில நெடுஞ்சாலை) சாலையில் லாலாப்பேட்டை இருப்புப் பாதை கடவு அடிக்கடி திறந்து மூடப்படுவதால், போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு விபத்துக்கள் ஏற்படுவதைத் தவிர்க்க, அவ்விடத்தில் மேம்பாலம் கட்ட வேண்டுதல்.

துறையின் பதிலுரை.

(5)

துறையின் பதிலுரை/விளக்கம் : மனுதாரர் அமைக்கக்கோரும் மேம்பாலமானது, இத்துறையின் பராமரிப்பிலுள்ள மாநில நெடுஞ்சாலையான நாகப்பட்டினம் - கூடலூர்-மைசூர் சாலை கி.மீ. 183/4ல் குறுக்கிடும், ஈரோடு-திருச்சி இருப்பாதை மார்க்கத்தில், லாலாப்பேட்டை மற்றும் திம்மாச்சிபுரம் இருப்புப்பாதை நிலையங்களுக்கிடையில் இரயில்வே கி.மீ. 93/4சி13ல் அமைந்துள்ள இருப்புப்பாதை கடவுக்கு பதிலாக அமைக்கப்பட வேண்டியதாகும்.

இந்த இருப்புப்பாதைக் கடவு. ஒரு நாளில் 27 முறை மூடப்படுகிறது. இச்சாலை வாகனப் போக்குவரத்து மிகுந்த மாநில நெடுஞ்சாலையாகவும், திருச்சி, தஞ்சை மற்றும் கோவை மாவட்டங்களின் உள்ளதால், மேற்கூறிய இருப்புப் பாதைக் கடவு மூடப்படும்போது வாகனப் போக்குவரத்து தடைபட்டு நெரிசல் ஏற்படுகிறது. எனவே இவ்விடத்தில் இருப்புப் பாதை கடவுக்கு பதிலாக மேம்பாலம் கட்டுவது அவசியமாகும். இங்கு மேம்பாலம் கட்டத் தோராயமாக ரூ. 250 இலட்சம் தேவைப்படும்.

இரயில்வே துறையினர் தயாரித்துள்ள 'ஒரு இலட்சம் இரயில் ஊர்தி அலக்கு மேலுள்ள இருப்புப்பாதை கடவுகள், தமிழ்நாடு' என்ற பட்டியலில் 75 இருப்புப்பாதைக் கடவுகள் இடம் பெற்றுள்ளன. இவற்றில் முக்கியமான இரண்டு அல்லது மூன்று இருப்புப்பாதைக் கடவுகளுக்கு பதிலாக மேம்பாலங்கள் கட்டும் பணியை, இரயில்வே பணிகள்' திட்டத்தில் எடுத்துச் செய்ய ஆண்டுதோறும் இரயில்வேதுறை தேர்வு செய்கிறது. இவ்வாறு இரயில்வே துறையினால் தேர்வு செய்யப்படும் பணிகளுக்கு மட்டுமே, இரயில்வே துறையும் தமிழ்நாடு அரசும் ஏற்படும் செலவினத்தை 50 : 50 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன.

குழுவின் பரிந்துரை.

(6)

லாலாப்பேட்டை இருப்புப்பாதை கடவுக்கு பதிலாக மத்திய அரசும் மாநில அரசும் 50 : 50 என்ற விதத்தில் செலவு செய்து அங்கே மேம்பாலம் கட்டித்தர வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

அவ்வாறு இரயில்வேத் துறையினால் தேர்வு செய்யப்படாத பணிகளை மேற்கொண்டால் ஏற்படும் செலவினம் முழுவதையும் தமிழ்நாடு அரசே ஏற்க வேண்டும். தற்போது மனுவில் குறிப்பிட்டுள்ள மேம்பாலமானது இரயில்வேத் துறையின்மேற் கூறிய பட்டியலில் இடம் பெறவில்லை. எனவே, இந்த மேம்பாலம் கட்டுவதால் ஏற்படும் செலவினம் முழுவதையும் தமிழ் நாடு அரசே ஏற்க வேண்டிவரும். அரசின் தற்போதைய நிதி நிலையில் பெருந்தொகை தேவைப்படும் இந்த மேம்பாலப் பணியை இத்துறையின் மூலம் பகுதி-2 திட்டத்தின் கீழ் மேற் கொள்ளும் வாய்ப்பு இல்லை.

எனினும், இத்துறையின் நாகப்பட்டினம்-கடலூர்-மைசூர் மாநில நெடுஞ்சாலையானது தலைமைப் பொறியாளர் (தேசியநெடுஞ் சாலை) சென்னை-5 அவர்களால், அவரது கடித எண் 16851/திட்டம் 2/தே.நெ./91, நாள் 14—2—1992-ல் 15 அரசு சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாக அறிவிக்கக்கோரும் கருத்துருவில் (அரசு நேர்முகக் கடித எண் 130421/எச்.வி.1/91 நாள் 21—11—1991-ன் தொடர்பாக அரசு பொதுப்பணித் துறைக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ள பட்டியலில்) இடம் பெற்றுள்ளது. இச்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக எடுத்துக்கொள்ள மைய அரசின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றால் தற்போது குறிப்பிட்டுள்ள இருப்புப்பாதை கடவுக்கு மேம்பாலம் அமைக்க வாய்ப்புள்ளது.

(கடித எண்ணும், தேதியும் : கடித எண். 71904/திட்டம்3/92-1, நாள் : 7—12—1992.)

13

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
16	4969	திரு. ஹெச். பஷீர், ராஜராஜன் நகர், திருச்சிராப்பள்ளி-620 021.	திருச்சிராப்பள்ளி நகராட்சி, காவிங்கராய குளம் திருஷ்ணமூர்த்தி நகர் விஸ்தரிப்பு குடியிருப்பு பகுதிகளில் சுமார் 50 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டது. எனவும் அவ்விடத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி குழாய் மூலம் கிடைக்கவேண்டும் என மனு செய்துள்ளார்.

துறையின் பதிலுரை. (5)

குழுவின் பதிப்புரை. (6)

திருச்சிராப்பள்ளி திருஷ்ணமூர்த்தி நகர் விஸ்தரிப்பு பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்வதற்கு திருச்சி நகராட்சியினரால் உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. என்பதனை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடிநீர் வசதி அளிப்பதில் உள்ள பிரச்சினைகளைத்தீர்க்க உரிய நடவடிக்கைகளை விரைந்து மாவட்ட ஆட்சியர் எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

(கடித எண்ணும் தேதியும் : கோ. மனு. இ.வ.அ. 2/92)

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
17	4930	திரு. போ. இரத்தினம், முன்னாள் உதவிபெரும் தலைவர் கல்லகம் ஊராட்சி ஒன்றியம் புள்ளம்பாடி-திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம் கல்லகம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கல்லகம் கிராமத்திலில் ஆண்டி ஓடையின் குறுக்கே அணைக்கட்டு கட்டுதல் கேட்ட மனு.

துறையின் பதிலுரை.

(5)

திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம் கல்லகம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கல்லகம் கிராமத்தின் அருகில் ஆண்டி ஓடையின் குறுக்கே அணைக்கட்டு கட்டும் திட்டத்திற்கு ரூ. 59.60 லட்சத்திற்கு திட்டத்தின் பிரேரணைகள் தலைமைப்பொறியாளர் (திட்டம் மற்றும் வடிவமைப்பு) சென்னை அவர்களின் மூலம் அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு அரசின் பரிசிலனையில் உள்ளது. இத்திட்டத்திற்கு திருச்சி மாவட்ட ஆட்சியர் அவரது கடித எண். ப. மு. 45855/89/அ6, நாள் : 22—1—1991-ல் ஒத்திசைவு வழங்கியுள்ளார். மேலும் சிறப்பு ஆணையர் நில நிர்வாகம், சென்னை அவரது கடித எண். சி. 22652/89/டி1/நாள் : 5—3—1991ல் இத்திட்டம் குறித்து அவரது ஒப்புதலையும் அரசுக்கு அனுப்பியுள்ளார். அரசு ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

(கடித எண். 247எம்/இ.வ.அ.2/கோ. 84ச28/92, தேதி 14—12—1992.)

குழுவின் பரிந்துரை.

(6)

இந்த அணைக்கட்டு திட்டத்தை நிறைவேற்ற அரசு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
18	4937	திரு துரை ராஜசேகரன், வி. துறையூர், பள்ளிவிடை போஸ்ட், லால்குடி தாலுகா.	சமயபுரம்-வாளாடி கிராமத்தை இணைக்கும் வாளாடி-வி. துறையூர் சாலையில் உள்ள 700 மீட்டர் மண் சாலையை தார்தளமாக்குதல்.

துறையின் பதிலுரை.

(5)

மனுவில் குறிப்பிட்டுள்ள சாலையின் பெயர் வாளாடி—வி. துறையூர் சாலை, இதன் மொத்த நீளம் (0|0 4|9 4.9கி.மீ. ஆகும். (இதில் 0|0—4|2 கி.மீ. வரை உள்ள பகுதி லால்குடி நெடுஞ்சாலை உட்கோட்ட பொறுப்பில் உள்ள அரசு இகர மாவட்ட சாலையாகும். இதன் மேற்பரப்பு தார்தளம், எஞ்சியுள்ள 70 மீட்டர் பகுதி லால்குடி ஊராட்சி ஒன்றிய சாலையாகும். இதன் மேற்பரப்பு மண் சாலையாகும். இதனை அரசு சாலையாக எடுத்துக் கொள்ள வேண்டி. தனி அலுவலர், ஊராட்சி ஒன்றியம், லால்குடி அவர்களிடமிருந்து பெறப்பட்ட ஒன்றியக் குழு தீர்மான நகலுடன் கருத்துரு அரசு செயலர், பொதுப்பணித்துறை, சென்னை, அவர்கட்கு தலைமைப் பொறியாளர் (தெ) சென்னை அவர்களின் க.எண் எண். 651, திட்டம் 4|91-7, நாள் 17—7—1991ல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குழுவின் பரிந்துரை.

(6)

கோட்டப் பொறியாளர் கருத்தையொட்டி, இந்த வருடம் (1993) மார்ச் மாதத்திற்குள்ளாக மேற்படி மண் சாலை வதார் சாதளமாக மேம்படுத்தப்பட்டு விடும் என்று குழு நம்புகிறது.

மேலும் கூடுதல் விவரங்கள் இவ்வலுவலக கு. எண். 203/9-வி3, நாள். 21—9—1992ல் தலைமைப் பொறியாளர் (நெ(ப) சென்னை அவர்க்கட்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் இச் சாலை மாடக்குடி-மருதூர் சாலை கி.மீ. 0/4ல் இணைந்து தொடர்ச்சியாக சென்று சமயபுரம்-மருதூர் சாலை கி.மீ. 1/6ல் சேர்கிறது. எனவே அரசிடம் இருந்து ஒப்புதல் கிடைக்கப்பெற்றவுடன் இதனை தார்தளமாக மேம்படுத்தப்பட்டு பராமரிக்கப்படும் என தெரிவித்துக்கொள்கிறேன். தற்சமயம் அவசியம் மற்றும் அவசரம் கருதி விடுபட்ட ஊராட்சி ஒன்றிய சாலைப்பகுதியை தார்தளமாக மேம் படுத்த தற்போது நடைமுறையில் இருந்துவரும் ஐவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் அல்லது பிறப்புத் தன்விறைவுத் திட்டத்தின் மூலம் மேற்கொள்ள லால்குடி ஊராட்சி ஒன்றிய ஆணையாளரை கேட்டுக் கொள்ளலாம்.

(கடித எண்ணும், தேதியும் : 13824/92, வ3, நாள் 7—12—1992.)

வரிசை (1)	மனு (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)	பரிசு 15
19	480	தலைவர், திருவள்ளுவர் மன்றம், திருமழப்பாடி-621 851	புள்ளம்பாடியிலிருந்து திருமானூர் மற்றும் பாளையப்பாடியிலிருந்து கீழப்பழுவூர் சாலை சீர் செய்தல்.	

துறையின் பதிலுரை.

(5)

புள்ளம்பாடி-திருமழப்பாடி சாலை (0/0-17/6) 17.6 கி.மீ. நீளமுள்ள அரசு முக்கிய மாவட்ட சாலையாகும். இச்சாலையில் ரூபாய் 4.5 லட்சம் மதிப்பீட்டில் மிகவும் பழுதடைந்த பகுதியான கி.மீ. 2/6-3/ ; 6/-8/0 மற்றும் 11/9-12/0ல் சீர் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. திருமழபாடியில் இருந்து திருமானூர் செல்லும் சாலை அரசு இதர மாவட்ட சாலையான கீழப்பழுவூர்-திருமழப்பாடி கி.மீ. 0/0-16/4ல் கி.மீ. கி.மீ. 16/4-12/4 முடிய பாளையப்பாடி வரையும் கி.மீ.12/4ல் பிரிந்து கரும்புசாலை அபிவிருத்தி திட்ட கோட்டத்தால் பராமரிக்கப்பட்டு வரும் திருமானூர்-பாளையப்பாடி சாலை கி.மீ. 0/0-4/8 இஆரும். 16.4 கி.மீ. நீளமுள்ள கீழப்பழுவூர்-திருமேபாடி சாலை களிசல் கலந்த களிமண் பகுதியில் உள்ளதால் இச்சாலை ஒவ்வொரு மழைக்காலத்திலும் பலத்த சேத மடைகிறது, இச்சாலையில் கி.மீ. 10/2, 8, 10 ; 11/6, 8; 12/2, 4, 13/4, 6; 14/8, 10 மற்றும் 15/0-16/4 ஆகிய பகுதிகள் சீர் செய்ய சென்ற ஆண்டில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒப்பந்தப் புள்ளி செய்ய ஒருவரும் முன்வராமையால் மதிப்பீடு இந்த ஆண்டு விலைப்பட்டியலுக்கு திருத்தியமைக்கப்பட்டு கண்காணிப்புப் பொறியாளர் (நெ) திருச்சி. அவர்கட்கு ஒப்பந்தப்புள்ளி கோர சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இச்சாலையில் மீதம் உள்ள பகுதியையும் சீர்செய்ய இக் கோட்ட கடித எண் 10690/92-வ4, நாள், 14—10—1972-ல் தலைமைப் பொறியாளர் (நெஞனப) சென்னை அவர்கட்கு நிறப்புநிதி கேட்டு எழுதப்பட்டுள்ளது. நிதி உதவி கிடைத்தும், அப்பகுதியும் சீர் செய்ய எடுத்துக் கொள்ளப்படும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

கடித எண்ணும், தேதியும் : 13843/92-வ4, நாள் 5—12 1972.)

மனுதாரர் வரவில்லை. துறையின் பதில்ரை பரிசு செய்யப் பெறுகிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
20	4977	திரு. சிவ. சிதம்பரம், தலைவர், ரோட்டரி ஊரக பணி, திருமழபாடி-621 851	திருமழப்பாடியிலிருந்து திருமானூர் வரையிலுள்ள சுமார் 9 கி.மீ. நீளமுள்ள சாலையினைச் சீர்செய்தல்.

துறையின் பதிலுரை.
(5)

திருமழப்பாடியிலிருந்து திருமானூர் செல்லும் சாலை இக் கோட்டத்தைச் சார்ந்த அரசு இதர மாவட்ட சாலையான கீழப்பழூர்-திருமழபாடி சாலை கி.மீ. 0/0-16/4-ல் கி.மீ. 16/4 முதல் 12/4 முடியவும் மற்றும் கி.மீ. 12/4 பாளையபாடி என்னும் இடத்திலிருந்து திருமானூர் இணைக்கும் கரும்புசாலை அபிவிருத்தித் திட்ட கோட்டத்தில் பராமரிக்கப்பட்டுவரும் திருமானூர்-பாளையபாடி சாலை கி.மீ. 0/0-4/8 ஆகும். கீழப்பழூர்-திருமழபாடி சாலையில் கி.மீ. 12/2. 4 : 13/4, 6, 14/8, 10 மற்றும் 15/0-16/4 ஆகிய பகுதிகள் சீர் செய்ய சென்ற ஆண்டில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில், ஒப்பந்தப்புள்ளி செய்ய ஒருவரும் முன்வராமையால் மதிப்பீடு இந்த ஆண்டு விலைப் பட்டியலுக்கு திருத்தியமைக்கப்பட்டு கண்காணிப்புப் பொறியாளர் (நெ) திருச்சிராப்பள்ளி அவர்கட்கு ஒப்பந்தம் கோர சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் மீதமுள்ள பகுதியையும் சீர் செய்ய இக் கோட்ட கடித எண் 10690/92-வ4, நாள் : 14--10--1992-ல் தலைமைப் பொறியாளர் (நெ ஊப) சென்னை, அவர்கட்கு சிறப்பு நிதி கேட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிதி உதவி கிடைத்ததும் அப் பகுதியும் சீர் செய்ய எடுத்துக் கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.
(கடித எண்ணும், தேதியும் : 14/041/92-வ4, நாள் : 4--12--1992.)

குழுவின் பரிந்துரை.
(6)

மாவட்ட ஆட்சியர் உறுதிமொழியினையொட்டி இந்தப் பணி இன்னும் 15 நாட்களுக்குள் செய்து முடிக்கப் பட்டுவிடும் என்று குழு நம்புகிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	(3)	மனுவின் சுருக்கம். (4)
21	4973	திரு. ஏ. வி. சிங்காரம், முன்னாள் துணைப் பெருந்தலைவர், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், அரண்மனைக்குறிச்சி அஞ்சல், அரியலூர் வட்டம்.	திருமானூர்-திருச்சி மெயின் ரோட்டில் அரண்மனைக்குறிச்சி பாலம் கட்டுதல்.

துறையின் பதிலுரை.
(5)

மனுவில் குறிப்பிட்டுள்ள அரண்மனைக்குறிச்சி பாலம் அரசு இதர மாவட்ட சாலையான கீழப்பழூர்-திருமழப்பாடி சாலை கி.மீ. 12/8ல் அரண்மணைக்குறிச்சியில் கட்டப்பட வேண்டும். தற் பொழுது 0!9 மீட்டர் உள் விட்டமுள்ள 24 வரிசை குழாய்கள்

குழுவின் பரிந்துரை.
(6)

மாவட்ட ஆட்சியர் கூறியதையொட்டி அரசின் ஒப்புதல் தல் பெற்று உடனடியாக மேல் உலர் மட்டப் பாலம் கட்டும் பணி நிறைவேற்ற வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

கொண்ட தாம்போகி அமைந்துள்ளது. மழைக்காலங்களில் பெருவெள்ளம் வருவது காரணமாக தாம்போகியின் மேல் மட்டத்துக்கு மேல் 3 அடி வரை வெள்ளம் செல்லும், மேலும், சுமார் 1.0 கி.மீ. தொலைவிலுள்ள கொள்ளிடம் ஆற்றில் நீர் சென்று கொண்டிருந்தால் இவ்வாய்க்காலின் நீர் ஆற்றில் கலக்க தாமதம் கொண்டு பின் தேக்கம் ஏற்பட்டு நீர் மட்டம் மேலும் உயர்ந்து சுமார் 5 அடி உயரம் வரை வெள்ளம் ஏற்படுகிறது. அதனால் வாகனப் போக்குவரத்து முற்றிலுமாக நின்று விடுகிறது. எனவே, இவ்விடத்தில் மேல் மட்டப்பாலம் ஒன்று கட்ட வேண்டியது மிக அவசியம். 75.0 மீட்டர் நீர்வழிப்பாதை கொண்ட இவ்வாய்க்காலின் மேல் உயர் மட்டப்பாலம் (High Level Bridge) கட்ட தோராயமாக ரூ. 1.50 கோடி நிதி தேவைப்படும்.

இப்பாலம் குறித்து, 1991-92 முதல் பகுதி 2 திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ள பரிந்துரை செய்யப்பட்டும் இவ்வேலைக்கு அரசு அங்கீகாரம் கிடைக்கப் பெறவில்லை. அரசு அங்கீகாரம் கிடைத்தும் வேலை எடுத்துக் கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக கொள்கிறேன்.

வரிசை எண்	மனு எண்	கடித எண்ணும், தேதியும்: 1375/92-உவ, நாள், 26-12-1992 மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
22	5079	திரு. ஆர். கணபதி ராமசுப்பிரமணியம் தலைவர், இளைஞர் நற்பணி மன்றம், பாரதி குடில், புலிவலம், கொடியாலம் (அஞ்சல்) திருச்சி, பின்கோடு-639 115.	புலிவலம் கொடியாலம் சாலையில் உள்ள குறைபாடுகள் குறித்து.
		துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
		(5)	(6)
		மேற்படி சாலை கூடலூர்-மைசூர் சாலையில் கி.மீ. 154/4ல் பிரிந்து செல்லும் இதர மாவட்ட சாலையாகும். நீளம் 2.8 கி.மீ. கி.மீ. 0/0-1/2 மற்றும் 2/0-2/8 வரை சென்ற வருடம் தார் சாலை புதுப்பிக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் பெய்த மழையின் காரணமாக நொடிகள் ஏற்பட்டதை சீர் செய்ய 25—11—1992 அன்று ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளது வேலை நடைபெறும் சமயம் முட்செடிகளும் அகற்றப்பட்டு விடும்.	மாவட்ட ஆட்சியர் கூறியதையொட்டி 29—1—1993 மாலைக்குள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதா என்று அறிய சர்வேயர் மூலம் அளவு எடுத்து ஆக்கிரமிப்பை வட்டாட்சியர் அகற்ற வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.
		சாலையின் இருபுறமும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதை கண்டறிய 1—12—1992 அன்று நில அளவையரை அனுப்பக் கோரி வட்டாட்சியர், திருச்சி அவர்களுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்புகளை அகற்றவும், நிதி நிலைக்கேற்ப சாலையை அகலப்படுத்தும் திட்டமும் படிப்படியாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.	

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
23	5254	திரு. ஆல். தட்சிணாமூர்த்தி, 83, ஏ. வடக்குத் தெரு, துறையூர்-621 010, உப்பிலியாபுரம் தொகுதி, திருச்சி மாவட்டம்.	திருச்சியிலிருந்து துறையூர் வரை உள்ள ஒரு வழிச் சாலையை இருவழித்தடமாக அகலப்படுத்துதல்.

துறையின் பதிலுரை.
(5)

பொருளில் குறிப்பிட்டுள்ள சாலை இத்துறையின் பராமரிப்பில் இருக்கும் முக்கிய மாவட்ட (எம்.டி.-ஆய்.) சாலை இனத்தைச் சார்ந்த திருச்சி-துறையூர் தம்மம்பட்டி சாலை எனப்படும். இச்சாலையின் மொத்த நீளம் 66.20 கி.மீ. (9/2-75.4) இதன் மேற்பரப்பு தார்த்தளம்.

இச்சாலையில் கி.மீ. 13/8-ல் இருந்து கி.மீ. 39-ல் முடிவடையும் துறையூர் வரை 25.2 கி.மீ. நீளம் ஒரு வழித்தடமாக உள்ள இச்சாலையை இருவழித்தடமாக மேம்பாடு செய்ய தோராயமாக ரூ. 75 லட்சம் தேவைப்படும். இப் பிரேரணை 1993-94ம் ஆண்டின் பகுதி இரண்டு நிட்டத்தில் சேர்க்கப்பட்டு தலைமைப் பொறியாளர் (நெ.ஊ.ப.), சென்னை-2 அவர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

குழுவின் பரிந்துரை.
(6)

1993-94-ஆம் ஆண்டு பகுதி 2 நிட்டத்தில் இப் பரிந்துரை அரசு சேர்த்து கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

கடித எண்ணும் தேதியும் 14177/92 வி1. நாள் : 8-12-1992

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
24	4883	திரு. கே. நடேசன், 99/2, பெரியார் தெரு, காவிரி நகர், குளித்தலை அஞ்சல் (திருச்சி மாவட்டம்).	குளித்தலையையும் மாணப்பாறையையும் இணைக்கும் சாலையை ஒரு வழி பாதையிலிருந்து அகலப்படுத்தி இரு வழிப்பாதையாக மாற்றி தரக் கேட்டல்.

துறையின் பதிலுரை.
(5)

மனுவில் குறிப்பிட்டுள்ள சாலை இத் துறையால் பராமரிக்கப் படும் முக்கிய மாவட்ட சாலையாகிய மணப்பாறை-குளித் தலை சாலையாகும்.

இச் சாலையின் மொத்த நீளம் 36.60 கி.மீ. (கி.மீ.0/0-36/6) இதில் 28.00 கி.மீட்டருக்கு ஒருவழிப்பாதையாகவும் 8,6 கி. மீட்டருக்கு இருவழிப்பாதையாகவும் உள்ளது.

மேற்படி ஒரு வழிபாதையை இருவழி பாதையாக மாற்ற தலைமைப் பொறியாளர் (நெஊப) அவர்களுக்கு பகுதி 2-ம் திட்டத்தின் கீழ் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

குழுவின் பரிந்துரை.
(6)

இது ரூ. 45 இலட்சம் செலவாகும் திட்டம், எனவே, பொதுமக்களின் நன்மையைக் கருதி இத்திட்டத் திற்கு அரசு ஒப்புதல் அளிக்கலாம் என குழு பரிந்துரை செய்கிறது. அதன் பிறகு மொத்த சாலை பரா மரிப்புக்கும் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு விரும்புகிறது.

மேலும் அரசு சாலைகளில் ஒரு வழிப்பாதையை இருவழிப்பாதையாக மாற்றும் திட்டத்தின் கீழும் செயல்படுத்த தலைமைப் பொறியாளர் (நெ.ஊ.ப.) அவர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

அரசின் திட்ட ஒப்புதலும் நிதி ஒதுக்கீடு கிடைத்தவுடன் பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(கடித எண்ணும் தேதியும், 14332/92/வ2, நாள் : 8—12—1992.)

வரிசை ஏண். (1)	மனு ஏண். (2)	மனுதாரின பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
25	4768	சுவாதி பெண்கள் இயக்கம், குண்டாங்கல்பட்டி மாதர் சங்கம், குண்டாங்கல்பட்டி, வீரராக்கியம் போஸ்ட், குளித்தலை தாலுகா. திருச்சி மாவட்டம்.	திருச்சி மாவட்டம், குளித்தலை வட்டம், திருஷ்ணராயபுரம் ஒன்றியம், சித்தலவாய் பஞ்சாயத்தைச் சேர்ந்த குண்டாங் கல்பட்டி கிராமத்தில் குடிநீர் பற்றாக்குறை உள்ளது. எனவே குடிநீர் வசதி செய்து பற்றாக்குறையை நீக்கக்கோரி விண்ணப் பம் கொடுத்துள்ளார்கள்.

துணையின் பதிலரை.
(5)

திருச்சி மாவட்டம், குளித்தலை வட்டம், திருஷ்ணராயபுரம் ஒன்றியம், சித்தலவாய் பஞ்சாயத்தைச் சார்ந்தது குண்டாங் கல்பட்டி கிராமம் ஆகும். இக்கிராமத்தில் இரண்டு (2) கையிறைப்பான்கள் உள்ளது. ஒரு பொதுக் கிணறு உள்ளது. அதில் ஒரு கையிறைப்பான் கு. வ. வாரியத்தால் போடப் பட்டது. மற்றொரு கையிறைப்பான் மாதர் சங்கத்தால் போடப்பட்டது ஒரு ஆழ்துளை குழாயிலும் பொதுக் கிணற்றிலும் நீர் இல்லை. இக் கிராமத்தின் தற்போதைய மக்கள் தொகை சுமார் 600 ஆகும். அதில் அரிசன மக்கள் தொகை சுமார் 100 ஆகும். எனவே மேற் கண்ட குடிநீர் போதுமானதாக இல்லை. வரும் நிதியாண்டில் (1993-94) இக்குடியிருப்புக்கு மின்விசைத் திட்டத்தின் மூலம் (Power pump Scheme) குடிநீர் வசதி செய்து கொடுக்கலாம் என பரிந்துரை செய்யப்படுகிறது.

நிர்வாகப் பொறியாளர் கூறியது போல் இந்த 31-—3—1993-க்குள் மின்விசைத் திட்டத்தின் மூலம் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுவிடும் என்று குழு நம்புகிறது.

(கடித எண்ணும் தேதியும், 5455/இவஅ. 3/கோ. குண்டாங் கல்பட்டி 92/நான் ; 24—12—1992).

வரிசை ஏண். (1)	மனு ஏண். (2)	மனுதாரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
26	4748	திரு. வி. திருமலை, செயலாளர், அ.இ.அ.தி.மு.கழகம், வெள்ளாளப்பட்டி கிளை, முசிறி வட்டம், திருச்சி மாவட்டம்.	முசிறி வட்டம், திருச்சி மாவட்டம், வெள்ளாளப்பட்டி கிராமத்திற்கு தற்போது உள்ள தரை மட்ட நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் விநியோகிக்கப்படும் குடிநீர் பற்றாக் குறையினால் புதிதாக 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியின் மூலம் குடிநீர்த் திட்டப் பணி அமைத்துத் தரக் கோருதல்.

		துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
		திருச்சி மாவட்டம். முசிறி வட்டத்திலுள்ள வெள்ளாளப்பட்டி கிராமம் வாளவந்தி மற்றும் மங்கலம் ஆகிய இரண்டு ஊராட்சிகளை உள்ளடக்கியதாகும். இருப்பினும் பெரும்பான்மை மக்கட்தொகை மங்களம் ஊராட்சியில் இருப்பதால் தற்போதைய 1992-ம் ஆண்டு சர்வேயில் இக்கிராமம் முழுவதும் தற்போது மங்களம் ஊராட்சியில் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது இக் கிராமத்தில் மூன்று ஆழ்துளைக் கிணறுகள், நிறந்தவெளிக் கிணறு ஒன்று மற்றும் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி ஆகியவைகள் இயங்கி வருகிறது. இக்கிராமத்தின் தற்போதைய மக்கட் தொகை சுமார் 3,000 நபர்கள் ஆகும். எனவே தற் போதுள்ள குடிநீர் ஆதாரங்களைக் கொண்டு ஆண்டு முழுவதும் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 40 லிட்டருக்கு குறைவாகவே குடிநீர் கொடுக்க முடிகிறது. எனவே இக் கிராமத்திற்கு வரும் நிதியாண்டில் (1993-94) நிதி நிலைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் மின் இறைப்பான் திட்டப்பணி மேற்கொள்ளப் படும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.	பதினைந்து நாட்களில் மேற்படி கிராமத்திற்கு குடிநீர் வழங்கப்பட்டுவிடும் என்று குழு நம்புகிறது.

(கடிதஎண் 5247-இ.வ.அ.3-92-கோ. முசிறி, நாள் 24—12—1992).

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
(1)	(2)		
27	5083	திரு மு. மகராசன், முன்னாள் தலைவர், கீழமாளிகை ஊராட்சி, செந்துறை ஒன்றியம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் 621 710.	திருச்சி மாவட்டம்—அரியலூர் வட்டம்—செந்துறை ஒன்றியம் கீழமாளிகை ஊராட்சி இராசாபாளையம் கிராமத்தில் ஆழ் குழாய்க் கிணறும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியும், கட்டிக் கொடுக்க கோரியுள்ளார்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
இராசாபாளையம் குடியிருப்பின் மக்கட் தொகை 600 ஆகும். கீழமாளிகை குடிநீர்த் திட்டத்திலிருந்து குழாய் விஸ்தரிப்பு செய்து ஏழு பொதுக் குழாய்களின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், 1991-ம் ஆண்டு வறட்சி நிவாரண (ASC Phase I) திட்டத்தின் கீழ இவ்வூரின் எல்லையில் ஒரு ஆழ்குழாய் கிணறு போட்டு கையிறைப் பான் பொருத்தப்பட்டு தற்போது பயனில் உள்ளது. ஆகையால் இக் கிராமம் தற்போது போதுமான குடிநீர் பெற்று உள்ளது. எனவே இக் கிராமத்திற்கு புதிய குடிநீர் திட்டம் அமைக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.	மனுதாரர் வரவில்லை. துறையின் பதிலுரை பதிவு செய்யப்பெற்றது.

(நிர்வாகப் பொறியாளர், தாகு வ. வா. ஊ. கு. தி. கோட்டம், அரியலூர்).

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
28	4903	திரு. ரா. சி. மாமுண்டியாப்பிள்ளை, காமராஜர் மன்றம், 10-ஏ, 2, பழைய சங்க வாயில் தெரு, குளித்தலை,—639 104. திருச்சி மாவட்டம்.	குளித்தலை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, விளையாட்டு இடவுக்காகவும், கட்டிட அபிவிருத்திக்காகவும், பொதுப் பணித்துறை அரசு புறம்போக்கு நிலத்தை கையகப்படுத்தி கல்வித்துறைக்கு மாற்றம் செய்து தரக் கோருதல்—சார்பு.

துறையின் பதிலுரை.
(5)

குளித்தலை, அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில்—தற்போது 1,800 மாணவிகள் பயிலுவதால், 1.07 ஏக்கர் பரப்பளவுள்ள குறைந்த இடத்தில் செயல்படுவதால், பள்ளியின் வடக்கு சுற்று சுவரை அடுத்து வாய்க்காலுக்கு அருகிலுள்ள சர்வே எண். 97-ல் உள்ள புறம்போக்கு நிலம் 0.35 ஹெக்டேர் (0.86 ஏக்கர்) பள்ளிக்கு ஒதுக்கித்தரக் கோரி பள்ளித் தலைமை யாசிரியரிடமிருந்து ந.க. 426 அ1/92 இலக்கமிட்ட 4—11—1992-ம் நாளைய நாளிட்ட கடிதத்துடன் வரப்பெற்ற கருத்தும் இவ்வலுவலக ந. க. 19668-சி1/92 இலக்கமிட்ட 10—11—1992-ம் நாளிட்ட கடிதத்துடன் திருச்சிராப் பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கட்கு பரிந்துரை செய்து பணிந்தனுப்பி வைக்கப்பட்டது என்றும் விவரத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

(ந. க. எண். 21089-சி1/92, நாள் 12—12—1992)

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
29	5250	திரு. எம். வைத்தியலிங்கம் பிள்ளை, செயலாளர், துறையூர் வட்ட சோழிய வேளாளர் சங்கம், துறையூர் 621 101.	துறையூர் அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளியை, மேல் நிலைப் பள்ளி யாக உயர்த்தக் கோருதல்—சார்பு.

துறையின் பதிலுரை.
(5)

1992—93-ம் கல்வி ஆண்டில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், கரூர் வட்டம், தாந்தோனிமலை, அரசினர் உயர்நிலைப் பள்ளி மட்டுமே மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டு, அரசாணை எண். 720, கல்வித்துறை, நாள் 13-8-1992-ல் ஆணையிட்டு பெற்றுள்ளது எனவே, துறையூர் அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டுமென்றால் 1993—94-ம் கல்வியாண்டில்தான் அரசினால் பரிசீலிக்கப் படும்.

தற்போதைய நடைமுறை விதிகளின்படி ஒரு அரசினர் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பெற வேண்டுமானால் அறுசு கட்டளைத் தொகையாக ரூ. 1,00,000 அரசுக் கணக்கில் உரிய தலைப்பில் செலுத்தப் பெறல் வேண்டும்.

முழுவின் பரிந்துரை.
(6)

துறையின் பதிலுரை படித்துப் பதிவு செய்யப் பெறுகிறது.

மனுவின் சுருக்கம்.
(4)

குளித்தலை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, விளையாட்டு இடவுக்காகவும், கட்டிட அபிவிருத்திக்காகவும், பொதுப் பணித்துறை அரசு புறம்போக்கு நிலத்தை கையகப்படுத்தி கல்வித்துறைக்கு மாற்றம் செய்து தரக் கோருதல்—சார்பு.

குழுவின் பரிந்துரை.
(6)

துறையின் பதிலுரை படித்துப் பதிவு செய்யப் பெறுகிறது.

துறையின் பதிலுரை.

(5)

உரிய படிவத்தில், உரிய இணைப்புகளுடன் கருத்துருக்கள் திருச்சிராப்பள்ளி மகளிர் பள்ளி ஆய்வாளரால் இருபிரதிகளில் முதன்மைக் கல்வி அலுவலருக்கு அனுப்பி வைத்தால், பரிந்துரை செய்து இயக்குநருக்கு அனுப்பப் பெறும். உரிய கருத்துருக்களை அனுப்பி வைக்குமாறு திருச்சிராப்பள்ளி மகளிர் பள்ளி ஆய்வரைக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. கருத்துருக்கள் பெறப்பட்டவுடன் தக்க பரிந்துரை செய்து, சென்னை, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்பெறும் எனப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(சுடித எண்ணும், தேதியும் ந. க. 21699-டி 4-92, நாள் 4—12—1992).

குழுவின் பரிந்துரை.

(6)

துறையின் பதிலுரை படித்து பதிவு செய்யப் பெறுகிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
30	5091	திரு. எம். சி. கிருஷ்ணமூர்த்தி, எச். சி. 448, அண்ணாநகர், நலவல்பட்டு அஞ்சல், (ஒ. எஸ்ப். டி.) திருச்சிராப் பள்ளி.	திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் ஒன்றியம், போலீஸ் காலனி, அண்ணாநகர் வடக்கு மற்றும் அண்ணா நகர் தெற்கு ஆகிய ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் கூடுதல் ஆசிரியர்கள் நியமனம் செய்ய வேண்டல்.

துறையின் பதிலுரை.

(5)

கீழ்க்கண்ட பள்ளிகளில் மாணவ-மாணவியர் வருகைப் பதிவின் அடிப்படையில் பின்வரும் விவரப்படி கூடுதல் ஆசிரியர் பணியிடங்கள் தேவைப்படுகின்றன:—

குழுவின் பரிந்துரை.

(6)

துறையின் பதிலுரை படித்துப் பதிவு செய்யப் பெறுகிறது.

	தேவையான ஆசிரியர்கள்.	அனுமதிக்கப் பட்டுள்ள பணியிடங்கள்.	தேவைப் படும் பணியிடங்கள்.
(1)	(2)	(3)	(4)
1. அரசு தொடக்கப் பள்ளி, அண்ணா நகர் (தெற்கு).	3	2	1
2. அரசு தொடக்கப்பள்ளி, அண்ணாநகர் (வடக்கு).	2	1	1
3. ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளி, போலீஸ்காலனி.	10	4	6

மேற்காணும் கூடுதல் ஆசிரியர் பணியிடங்கள் அரசால் அனுமதிக்கப்பட்டால் அப்பணியிடங்கள் ஆசிரியர்கள் நியமனம் அளித்து நிரப்பப்படும்.

(கடித எண்ணும், தேதியும், ந. க. 21059/பி2/92, நாள் 11—12—1992).

வரிசை எண் (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
31	4651	திரு. பஷீர், தலைவர், பிளாட் எண். 24, ராஜன் நகர், திருச்சி—21.	கிருஷ்ணமூர்த்திநகர் விஸ்தரிப்பில் உள்ள 'டி' பகுதிக்கு கிராப்பட்டியிலிருந்து மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வந்தது திருஷ்ணமூர்த்தி நகரில் புதிதாக அமைந்துள்ள மின் மாற்றியிலிருந்து மின் விநியோகம் செய்யக் கோரியது.
		துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
		கிருஷ்ணமூர்த்தி நகர் விஸ்தரிப்பில் உள்ள 'டி' பகுதிக்கு கிருஷ்ணமூர்த்தி நகரில் புதிதாக அமைந்துள்ள மின் மாற்றியிலிருந்து மின் விநியோகம் செய்வதற்கு ரூ. 12,400க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணி விரைவில் செய்து முடிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.	துறையின் பதிலுரை படித்துப் பதிவு செய்யப் பெறுகிறது.

(செயலாளர், மின்சார வாரியம், சென்னை-2 அவர்களின் கடித எண். ந. க. ஐ. 2/91121/92, நாள் 27—11—1992.)

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
32	4950	திரு. ரா. ராகவன், பொதுநல விரும்பி, 105, கிழச்சித்திரை வீதி, ஸ்ரீரங்கம், திருச்சி—620 006.	ஸ்ரீரங்கத்தில் இயங்கும் இளநிலை மின் பொறியாளர், இயக்குதலும் பராமரித்தலும் திருவானைக்கோவில் அலுவலகத்தைத் திருவானைக் கோவிலிலேயே அமைக்கக் கோரி.
		துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
		திருவானைக்கோவில் பிரிவு அலுவலகம் துவக்கப்பட்ட நாள் முதல் சுமார் 10 ஆண்டுகளாக திருவானைக் கோவிலை அடுத்துள்ள ராமசாமி ரெட்டியார் தெருவில் இயங்கி வருகிறது. அமைய மணவாளம், கூடப்பள்ளி, பாச்சூர், அத்தானி, நெற்குப்பை ஆகிய பகுதிகளில் உள்ள மின் நுகர்வோர்களது நலனுக்காக அமைய மணவாளம் ராமத்தில் ஒரு கம்பியாளரும், நொச்சியத்தில் ஒரு கம்பியாளரும், கூத்தூரில் ஒரு உதவியாளரும் மற்றும் டோல்கேட்டில் கம்பியாளரும் பணி புரிந்து இங்கு ஏற்படும் மின் தடங்கல்களை உடனுக்குடன் நிவர்த்தி செய்கிறார்கள்.	மனுதாரர் வரவில்லை. துறையின் பதிலுரை பதிவு செய்யப்பட்டது.

துறையின் பதிலுரை.

(5)

மேலும் மின் கட்டணம் வசூல் செய்வதற்காக வசூல் மாதங் களின் 2-ம் தேதி நொச்சியத்திலும், 5-ம் தேதி பாச்சூரிலும், மூகாம் வசூல் மையத்தின் மூலம் நேரிடையாக மின் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

தற்பொழுது திருவானைக் கோவில் அலுவலகம் இயங்கி வரும் கட்டிடத்தில் தொலை பேசி வசதியும், மின் தடை நீக்குவதற்கான ஒரு தனி அமைப்பும் (Fuse off call centre) இயங்கி வருவதால் தொலைபேசி மூலம் தெரிவிக்கப்படும் புகார்களையும் நேரில் கூறப்படும் புகார்களையும் உடனுக் குடன் தாமதமின்றி கவனிக்கப்பட்டு வருகிறது.

மேலும், இப்பகுதி மின் நுகர்வோர் நலனுக்காக டோல்கேட்டை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய பிரிவு அலுவலகம் அமைக்கும் திட்டம் வாரிய அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தவுடன் டோல்கேட்டில ஒரு பிரிவு அலுவலகம் அமைக்கப்படும்.

(செயலாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை—2 அவர்களின் கடித எண். 76037/பொ. பி. 1/92-4, நாள் 7—1—1993)

குழுவின் பரிந்துரை.

(6)

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
33	5859	திரு. எஸ். சுபாஷ்சந்திரன், செயலாளர், இராயர் நோப்பு குடியிருப்போர் நலச்சங்கம், கூத்தூர், பிச்சாண்டார் கோவில் ஆர். எஸ். , திருச்சி—621 216.	திருச்சி மாவட்டம் லால்குடி வட்டம், தாளக்குடி கிராமத் தைச் சார்ந்த இரமங்கலம் மற்றும் பிச்சாண்டார் கோவில் புகை வண்டி நிலையத்தின் அருகில் உள்ள சுமார் 100 புதிய குடியிருப்புப் பகுதியில் குறைந்த மின் அழுத்தம் நிலவுவது தொடர்பாக.

துறையின் பதிலுரை.

(5)

மேற்படி பகுதிக்கு கூத்தூர் மின் மாற்றியிலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இப் பகுதியின் குறைந்த மின் அழுத்தத்தினை அகற்ற ஒருமுனை மின் பாதையை மும்முனை மின் பாதையாக மாற்றம் செய்து பிரித்து மின் விநியோகம் செய்யப்பட்டு, தற்பொழுது மின் அழுத்தம் நல்ல முறையில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், அந்தக் குடியிருப்பு பகுதிகளுக்கு தனி மின் மாற்றி அமைக்கும் பணி தீவிரமாக செய்யப்பட்டு வருகிறது. விரைவில் இப்பணியை செய்து முடிக்கப்படும்.

(செயலாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை—2, அவர்களின் கடித எண். மே. பொ./ம. தொ. அ-/தி./வ./5/388/92, நாள் 17—12—1992.)

குழுவின் பரிந்துரை.

(6)

துறையின் பதிலுரை படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
34	4681	ஏ. சம்பத், கோவில் பாளையம், துங்கபுரம் அஞ்சல், பெரம்பலூர் தாலுக்கா, திருச்சி மாவட்டம்.	கோவில்பாளையம், கிளை மருந்தகத்திற்கு கால்நடை மருத்துவர் வேண்டி.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
அரியலூர் கோட்டம், வேப்பூர் ஊராட்சி ஒன்றிய பகுதியில் உள்ள கோவில்பாளையம், கால்நடை கிளை நிலையம், கால்நடை விரிவாக்க அலுவலர்களாக கால்நடை ஆய்வாளர் பணிபுரிந்த கிளை நிலையம் ஆகும். 1983ஆம் வருடத்தில் கால்நடை விரிவாக்க அலுவலர் பதவியில் கால்நடை ஆய்வாளர் பதவி எடுக்கப்பட்ட நாள் முதல் இக்கிளை நிலையம் காலியாக உள்ளது. இக்கிளை நிலையத்தை அகரம் சிகூர், கிளை நிலைய கால்நடை ஆய்வாளர் திரு. ஏ. வீரமுத்து, வாரத்தில் மூன்று நாட்கள் கூடுதல் பொறுப்பில் பார்த்து வருகிறார். எனவே, இக்கிளை நிலையத்தை புதிதாக ஒரு கால்நடை ஆய்வாளரை, நியமனம் செய்து இக்கிளை நிலையத்தை முழு நேரமாக இயங்கும் கிளை நிலையமாக மாற்ற ஆவன செய்யலாம். துணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத் துறை (நிலை அபிவிருத்தி), திருச்சிராப்பள்ளி. (கடித எண். 8115/அ1/92, நாள் 14—12—1992.)	மாவட்ட ஆட்சியர் கூறியதை குழு ஏற்றுக்கொண்டு, இனிமும் கோவில் பாளையம் கிளை மருந்தகத்திற்கு ஒரு ஆய்வாளரை அனுப்பும் முறை உடனடியாக நடைமுறைக்கு கொண்டு வரவேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
35	4896	திரு.ந. சங்கரன், அத்தியூர் கிராமம் மற்றும் அஞ்சல், பெரம்பலூர் வட்டம், திருச்சி மாவட்டம்.	அத்தியூர் கிராமத்தில் கால்நடைப்பட்டி அமைப்பது குறித்து பொதுமக்கள் புகார்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
அத்தியூர் கிராமத்தில் கால்நடைப்பட்டி அமைப்பது குறித்து பெரம்பலூர் தாலுக்கா தலைமைத் துணை தாசில்தார் அவர்களை அணுகி கேட்டுக்கண்ட விவரங்கள் பெறப்பட்டன. மனுவில் குறிப்பிட்டபடி—வேப்பூர் ஊராட்சி ஒன்றியப் பொறியாளர், மற்றும் வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றிய பொறியாளர்களை கால்நடைப்பட்டி அமைக்கும் பொருட்டு, எந்தவிதமான கருத்துரு, வட்டாட்சியரால் அனுப்பும்படி கோரப்படவில்லை எனவும், அது போன்ற கோப்பு ஏதும் நிலுவையில் இல்லை எனவும் தெரிவித்தார்.	மாவட்ட ஆட்சியர் கூறியபடி, துணை இயக்குநர் (கா.ப.) கருத்துருவை தாசில்தாருக்கு அனுப்பி, தாசில்தார் யூனியன் இன்ஜினியரிடம் அறிக்கை பெற்று ப்ரபோசல் போட வேண்டும் அல்லது ஜெவி. விடியில் கட்ட ஏற்பாடு செய்ய முடியுமா என்று ஆர். டி. ஓ. பெரம்பலூர் யூனியனிடம் எஸ்டிமேட் வாங்கி இந்த வருஷமே சேர்க்க விரைந்து ஒரு வாரத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை.

(5)

கால்நடைப்பவுண்டு அத்திபூரில் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து அனுப்பும்படி, அந்த பிரசுரக வருவாய் ஆய்வாளர் கோரப்பட்டுள்ளதாகவும், அறிக்கை இன்னும் பெறப்படவில்லை எனவும், உரிய பிரிவு எழுத்தர் தெரிவித்தார்.

[இணை இயக்குநர், கால்நடைப்பெருக்கம், நீலகிரி அபிவிருத்தி, திருச்சிராப்பள்ளி அவர்களின் க. எண். ந. க. எண். 7843/ஆ1/92, 14—12—1992.]

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
36	4985	திரு. என். வீரமலை, திருமேவியூர், வயலூர் அஞ்சல், குளித்தலை வட்டம், திருச்சி மாவட்டம்.	திருச்சி மாவட்டம், குளித்தலை வட்டம், திருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ட்டி.ஆர்.டி. 1087, திருமேவியூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் பற்றி திரு. என். வீரமலை என்பவர் திருச்சிராப்பள்ளி கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், இச்சங்கப் பாலை ஆறு முறை நிறுத்தம் செய்துள்ளது. ஏழாவது முறையாக 1—9—1992 முதல் பாலை நிறுத்தம் செய்துள்ளது என்றும், மீண்டும் பாலை எடுத்துக்கொள்ளவும், அத்துடன் சங்கப்பாலை நிறுத்தம் செய்யாது தொடர்ந்து எடுத்துக்கொள்ள செய்வதோடு, 21—8—1992 முதல் 31—8—1992 முடியவுள்ள காலத்திற்கான பால் பணத்தையும் வழங்கக் கோரியும் மனுவில் விண்ணப்பித்துள்ளார்

குழுவின் பரிந்துரை.

(6)

மனுதாரர் வரவில்லை, துறையின் **பதிலுரை பதிவு செய்யப்பட்டது.**

துறையின் பதிலுரை

(5)

குளித்தலை வட்டத்தில் 4—8—1986 முதல் செயல்பட்டு வரும் திருமேனியூர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் கடந்த ஏப்ரல் மாதம் முதல் சராசரியாக நாள் ஒன்றுக்கு 28 லிட்டர் பாலை ஒன்றியத்திற்கு அனுப்பி வந்தது. இதனால், சங்கம் இலாபத்தில் இயங்க வாய்ப்பில்லை. பால் உற்பத்தியை அதிகரிக்க பலமுறை சங்கத்திற்கு அறிவுறுத்தியும் சங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, சங்கத்தின் பாலை 1—9—1992 முதல் நிறுத்தம் செய்யப்பட்டது. முன்னாள் சங்கத் தலைவர் திரு. வீரமலை மற்றும் செயலாளர் ஆகிய இருவரும் பால் உற்பத்தியை அதிகரித்து கொடுப்பதாக அளித்த உறுதிமொழியின் பேரில் 1—11—1992 முதல் ஒன்றியம் பாலை எடுத்துக்கொள்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும், 21—8—1992 முதல் 31—8—1992 வரை உள்ள பால் பணம் ரூ. 1,117.95-ஐ 1—12—1992 அன்று பட்டுவாடா செய்யப்பட்டது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணைய நிர்வாக இயக்குநரின் க.எண். ந.க. எண். 4985/9-1/ச.ம.பே.செ. நாள் : 19—11—1992.)

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம் (4)
37	4672ஏ	திரு. எஸ். குழந்தைவேல், ஒன்றிய செயலர், அண்ணா விவசாயப் பிரிவு, நாகநல்லூர், துறையூர் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	மனுதாரர் வெள்ளாளப்பட்டி, முத்தையாப்பளையம், குக்கலாம்பட்டி ஆகிய ஊர்களை தனியே, கொப்பம்பட்டி, வைரிசெட்டிபாளையம் ஆகிய மூன்று தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலிருந்து பிரித்து நாகநல்லூரைத் தலைமையிடமாகக் கொண்டு மேற்சொன்ன 4 ஊர்களுக்கும் புதியதாக ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஏற்படுத்தித்தர கோரியுள்ளனர்.

துறையின் பதிலுரை
(5)

மனுதாரர் தெரிவித்துள்ள நாகநல்லூர் உட்பட 4 ஊர்க ம் கொப்பம்பட்டி, வைரிசெட்டிப்பாளையம், தளுகை ஆகிய 3 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் விவ காரஎல்லையில் உள்ளவை மனுதாரர் கோரியபடி நாகநல்லூரை தலைமையிடமாகக் கொண்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைய வேண்டுமெனில், மேலே தெரிவிக்கப்பட்ட 3 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் பேரவைக் கூட்டத்தில் உறுப்பினர் களில் பெரும்பகுதியினர் இக்கிராமங்களைத் தங்கள் விவ காரஎல்லையிலிருந்து நீக்கிட இசைவு தெரிவிப்பதுடன் புதிதாக வங்கி தொடங்கினால், நன்முறையில் செயல்பட இயலுமா என்பதை முறிறி சரகத் துணைப்பதிவாளரும், நிதி உதவியளிக்கும் திருச்சி மத்திய கூட்டுறவு வங்கி யாரும் அளிக்கும் கருத்துரையினடிப்படையில் தான் பரிசீலிக்க இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கி றேன்.

(இணைப்பதிவாளரின் க எண் ந ச எண் 26801/92, வே.சே.ச., நாள் : 9—12—1992.)

குழுவின் பரிந்துரை.
(6)

இணைப்பதிவாளர் தெரிவித்த கருத்தினையொட்டி இன்னும் 45 நாட்களுக்குப் பிறகு வங்கி தொடங்குவது பற்றிய ஆய்வறிக்கையைப் பெற்ற பின் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று குழு விரும்புகிறது..

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம் (4)
38	4949	திரு. பி. டி. தவசோதி, வட்டாரச் செயலர், திருச்சிராப் பள்ளி (தெற்கு) மாவட்ட இந்திய தேசிய கிராமத் தொழி லாளர் சம்மேளனம் தாத்தையங்கார்ப்பேட்டை வட் டாரம் மாவலிப்பட்டி அஞ்சல், முசிறி வட்டம்.	தாத்தையங்கார்ப்பேட்டையில் பேருந்து நிலையம் கட்டப் பட்டும் பல வருடங்களாகப் பேருந்துகள் பேருந்து நிலை யத்திற்குள் செல்வதில்லை என்றும் பைபாஸ் ரோடு போடப்பட்டும் அதன் வழியாகவும் பேருந்து செல்வ தில்லை என்றும் பஸ் நிலையத்திற்கு பேருந்துகள் போகாமல் கடைவீதியில் நிற்கப்படுவதால் போக்குவரத் திற்கு இடைஞ்சல் ஏற்படுகிறது என்ற குறைகளும் தெரி விக்கப்பட்டுள்ளது

துறையின் பதிலுரை.

(5)

இப்புகார் சம்பந்தமாக 5—12—1992 மற்றும் 6—12—1992 தேதிகளில் கரூர் இயக்கூர்தி ஆய்வாளர்கள் இருவரும் தாத்தையங்கார்பேட்டையில் முகாமிட்டு பேருந்துகளை தணிக்கை செய்யவும் பேருந்து நிலையத்தை ஆய்வு செய்யவும் பணிக்கப்பட்டனர். இயக்கூர்தி ஆய்வாளர்கள் அரசு மற்றும் தனியார் பேருந்துகளின் ஓட்டுநர் நடத்துனர்களுக்கு பேருந்து நிலையத்திற்குள் சென்றுவர அறிவுரை வழங்கி பேருந்து நிலையத்தை பயன்படுத்தாத பேருந்துகளுக்குத் தணிக்கை அறிக்கைகளும் வழங்கினர். காவல்துறை மூலமும் நடவடிக்கை எடுக்க பணிக்கப்பட்டது. தணிக்கையின்போது பேருந்து நிலையத்திற்குள் செல்லும் பைபாஸ் சாலை பழுதுபட்டு இருப்பதாகவும், பேருந்து நிலையத்தில் முக்கிய அடிப்படை வசதிகள் இல்லாததால் பொதுமக்கள் பயன்படுத்தாததாலும் பேருந்துகள் பேருந்து நிலையத்திற்குச் செல்ல இயலவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. பேருந்து நிலைய ஆய்வின் போது இக்குறைகள் ஊர்ஜிதமானது. எனவே, இக் குறைகளை நிவர்த்தி செய்யுமாறு நிர்வாக அலுவலருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. பைபாஸ் சாலையை பழுது பார்ப்பதற்காக அரசாங்க ஒதுக்கீடு தொகை ரூ. 2½ இலட்சம் எதிர்பார்க்கப்படுவதாலும், நிதி கிடைத்த வுடன் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று இவ்வூராட்சி ஒன்றிய முன்னாள் தலைவர் மூலம் அறியப்பட்டது.

எனவே, பைபாஸ் சாலையும் பேருந்து நிலைய குறைகளும் சரிசெய்யப்பட்டால்தான் பேருந்துகள் பயன்படுத்த இயலும் என்பதை பணிவுடன் தெரிவிக்கப்படுகிறது.

[வட்டாரப் போக்குவரத்து அலுவலர், கரூர், கடித எண். 6634/அ4/1992, நாள் : ——12—1992.]

குழுவின் பரிந்துரை.

(6)

வட்டாரப் போக்குவரத்து அலுவலரின் உறுதிமொழியை ஏற்று, இன்னும் சில நாட்களில் பேருந்துகள் பேருந்து நிலையத்தில் நிறுத்தி பயன்படுத்தும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுவிடும் என்று குழு நம்புகிறது.

மனுவின் சுருக்கம்.

(4)

திருச்சிராப்பள்ளி மாவட்டம், குளித்தலை வட்டம், கிருஷ்ணராயபுரம் ஒன்றியத்தைச் சார்ந்த நத்தமேடு, கோரகுத்தி, கருப்பூர், மேலடை வழியாக மாணிக்கபுரம் வரை பேருந்து வசதி கருநிலிருத்து மாணிக்கபுரம் வரை செய்துகொடுக்கும்படி கோரப்பட்டுள்ளது.

குழுவின் பரிந்துரை.

(6)

முசிறியிலிருந்து சாலைப்பட்டு வரை 29—3—1993லிருந்தே பேருந்து இயக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)
39	4661

மனுதாரரின் பெயரும் முகவரியும்.

(3)

சுவாதி பெண்கள் இயக்கம், மாதர் சங்கங்கள், நத்தமேடு, கோரகுத்தி, கருப்பூர், மணவாளி அஞ்சல், மாயனூர் (வழி), குளித்தலை வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

துறையின் பதிலுரை.

(5)

அரசு ஆணைப்படி 1,000 மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்குப் பேருந்து வசதி செய்துதரும் திட்டத்தின் கீழ் மனுவில் கோரப்பட்டுள்ள நத்தமேடு கோரகுத்தி,

மேலடை, மாணிக்கபுரம் கிராமங்களுக்கு கரூரிலிருந்து—கோரச்சுத்தி (வழி) புலியூர், மணவாசி மற்றும் கரூரிலிருந்து கீழடை (வழி) உப்பிடமங்கலம், மேலடை மற்றும் மாணிக்கபுரம் வழித்தடத்தில் பேருந்து வசதி செய்யப்படவுள்ளது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

[மேலாண்மை இயக்குனர், தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம், அவர்களின் கடித எண். தீ.சி.போ.க/போ./இ.வ.2159/92, நாள் 15—12—1992.]

வரிசை எண். (1)	மனு எண். (2)
40	4668

மனுதாரரின் பெயரும், முகவரியும்.

(3)

திரு. கே. பாலகிருஷ்ணன், பி.ஏ., பி.எல்., வழக்குரைஞர், நடுப்பாளையம், ஏமூர் அஞ்சல், கரூர்-639 005, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

துறையின் பதிலுரை.

(5)

தமிழ்நாடு அரசின் ஆணைப்படி 1,000 மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு பேருந்து வசதி செய்து கொடுக்கும் திட்டத்தின் கீழ் ஏமூர், ரத்தப்பட்டி கிராமங்களுக்கு 28—11—1992 முதல் பேருந்து வசதி செய்யப்பட்டு பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. மேலும், கரூர்-ஜெகதாபி வழித்தடத்தில் பேருந்து இயக்குவது குறித்து தக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

[மே. இ. தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம் அவர்களின் கடித எண். தீ.சி.போ.க./போ./தில 2/159/92, நாள் 15—12—1992.]

மனுவின் சுருக்கம்.

(4)

திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் வட்டம், ஏமூர் கிராமத்திற்கு பேருந்து வசதி செய்யக்கோருதல் கரூர்-ஜெகதாபி (வழி) தாந்தோன்றி மலை, ஏமூர், உப்பிடமங்கலம் வழித்தடத்தில் பேருந்து இயக்கக் கோருதல்.

குழுவின் பரிந்துரை.

(6)

மனுதாரர் வரவில்லை. துறையின் பதிலுரை படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண். (1)	மனு எண். (2)
41	4677

மனுவாரரின் பெயரும் முகவரியும்.

(3)

திரு. துரை. இராஜசேகரன், வி. துறையூர், பள்ளிவிடை (அஞ்சல்), லால்குடி தாலுகா, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

துறையின் பதிலுரை.

(5)

வி. துறையூர் கிராமம் சமயபுரம்-மாடக்குடி வழித்தடத்திலிருந்து உட்புறமாக 1.0 கி.மீ. தொலைவில் உள்ளது. மேற்படி கிராமத்திற்கு செல்லும் சாலை பேருந்து வசதி பெறாத பகுதியாகும். மேற்படி பகுதியின் சாலைத்தகுதி குறித்து கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலை மற்றும் கிராமப்பணித்துறை, திருச்சிராப்பள்ளிக்கு கடிதம் எழுதியுள்ளோம். பதில் பெறப்பட்டதும், வி. துறையூர் கிராமத்திற்கு பேருந்து வசதி அளிக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[மே. இ. தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம் அவர்களின் க. எண். தீ.சி.போ.க. இவ.3/722/92, நாள் : 11—12—1992.]

மனுவின் சுருக்கம்.

(4)

வி. துறையூர் கிராமத்திற்கு மெயின்கார்டுகேட்டிலிருந்து பேருந்து வசதி அளிக்கக் கோருதல்.

குழுவின் பரிந்துரை.

(6)

நேரடி சாட்சியத்தின் போது, தகுதிச் சான்றிதழ்கூட கொடுத்து விட்டதாக மனுதாரர் சொன்னதால் அப்படியென்றால் உடனடியாக பேருந்துவிடலாம் என தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் தெரிவித்தார். குழுவிடம் தெரிவித்தபடி மேற்படி தடத்தில் பேருந்து இயக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
42	47/6	திரு. எஸ். பி. சுப்பிரமணியன், மாநில செயற்குழு உறுப்பினர், தமிழ்நாடு ஜனதாதளம், தண்ணீர்ப்பள்ளி அஞ்சல், குளித்தலை தாலுகா, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	(1) மெயின்கார்டுகேட்-பட்டவர்த்தி வரும் நகரப்பேருந்தின் அனைத்து நடைகளையும் பட்டவர்த்திக்கு இயக்கப்பட வேண்டும். (2) மெயின்கார்டுகேட்-குளித்தலை வரை நகரப் பேருந்து இயக்கப்பட வேண்டும்.

துறையின் பதிலுரை.

(5)

(1) நீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்திலிருந்து மெயின்கார்டுகேட்-பட்டவர்த்தி வரை 6 சிங்கில்களும், மெயின்கார்டுகேட்-பெட்டவாய்த்தலை வரை 8 சிங்கள்களும் ஒரு நகரப் பேருந்து மூலம்இயக்கப்பட்டு வருகிறது.

மேற்படி பேருந்தின் அனைத்து நடைகளையும் பட்டவர்த்திக்கு மாற்றி இயக்கினால் தற்பொழுது பெட்டவாய்த்தலை வரை இயக்கப்படும் கால நேரங்களில் பேருந்து வசதி பெற்று வரும் பகுதி மக்களுக்கு பாதிப்பு ஏற்படும். ஏனெனில், கால நேரம் மாறுபடும். திருச்சி-கரூர் வழித்தடத்தில் இயக்கப்பட்டு வரும் புறநகர் பேருந்துகளை தண்ணீர் பள்ளியில் நின்று பயணிகளை இறக்கி, ஏற்றத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை தெரித்வித்துக்கொள்கிறோம்.

(2) மெயின்கார்டுகேட்-குளித்தலை வரையுள்ள தடத்தின் மொத்த தூரம் 34.0 கி.மீ. ஆகும். அரசு ஆணைப்படி நகரப்பேருந்து அதிகபட்ச தூரமாக 30.0 கி.மி. வரை தான் இயக்கப்பட வேண்டும். மேலும், 5.0 கி.மீ. நீட்டித்து இயக்கலாம். நீட்டித்து இயக்கப்படும் பகுதியில் 1,000 மக்கட் தொகைக்கு அதிகமுள்ள பேருந்து வசதி பெறாத ரிராமங்கள் இருந்தால் மட்டுமே நீட்டித்து இயக்க அரசு ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மெயின்கார்டுகேட்-குளித்தலை வழித்தடப் பகுதி முழுமையும் நகர மற்றும் புறநகர் பேருந்து வசதிகள் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. எனவே, மெயின்கார்டுகேட்-குளித்தலை வழித்தடத்தில் நகரப் பேருந்து இயக்க அனுமதி இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

[மேலாண்மை இயக்குநர், நீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம் அவர்களின் க.எண். நி.சி.போ.கு./திவ3/723/92, நாள் : 11—12—1992.]

குழுவின் பரிந்துரை.

(6)

குளித்தலையிலிருந்துபட்டவர்த்தி இரண்டரை கிலோமீட்டர் தான் உள்ளது. நீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகப் பொது மேலாளர் பள்ளிக்குழந்தைகளுக்கென பேருந்து தடத்தை விரிவுபடுத்தி 15 நாட்களில் மாவட்ட ஆட்சியருக்கும் மனுக்கள் குழுவிற்கும் அது குறித்த அறிக்கை அனுப்பப்பட வேண்டும் என்று குழு விரும்புகிறது. குளித்தலை அருகிலுள்ள மணத்தட்டைக்கு பஸ் வருகிறது. அதை விரிவு செய்தாலும் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் எனவும் குழு விரும்புகிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
43	5051	திரு. எ. வேலாயுதம், இணைச் செயலாளர் (பொன்மலை நகர காங்கிரஸ் கமிட்டி), எண். 13, இந்திராகாந்தி மெயின் ரோடு, காமராசர் நகர், விமானநிலையம், திருச்சி-620 007.	விமான நிலையத்திலிருந்து மெயின்கார்டுகேட்டிற்கு பள்ளிக் குழந்தைகள் நலன் கருதி காலை 8—00 மணியளவில் பேருந்து வசதி செய்து தர கோருதல்.

துறையின் பதிலுரை.

(5)

விமானநிலையம் வழித்தடத்தில் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்திலிருந்து 13 நகரப் பேருந்துகள் மூலம் 163 சிங்கிள்களும், மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்திலிருந்து 5 நகரப்பேருந்துகள் மூலம் 70 சிங்கிள்களும், தனியார்துறையிலிருந்து 9 நகரப் பேருந்துகள் மூலம் 150 சிங்கிள்களும் இயக்கப்பட்டு வருகிறது.

இதில் தனியார்துறை நகரப் பேருந்து ஒன்று செம்பட்டு-நாச்சியார்கோவில் (வழி) விமானநிலையம் வழித்தடத்தில் முழுநேர நகரப்பேருந்தாக இயக்கி வருகிறார்கள். விமான நிலையம்-செம்பட்டு வரையுள்ள தூரம் 1.5 கி.மீ. ஆகும். தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்திலிருந்து விமான நிலையத்தில் காலை 8.10 மணியளவில் டிரிப் எடுத்து டோல்கேட் வழியாக மெயின்கார்டுகேட் வரை பேருந்து இயக்க தக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

[மேலாண்மை இயக்குநர், தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம், கடித எண்ணும், தேதியும் : தீ.சி.போ.க./இவ3/701/92, நாள் : 4—12—1992.]

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
44	4669	ஊர் பொதுமக்கள் மற்றும் இளைஞர் மகளிர் சங்கம், மேலமாயனூர், மாயனூர் (வழி), குளித்தலை வட்டம்.	கரூர்--மேலமாயனூர் டவுன் பஸ் விடக் கேட்டல்.

துறையின் பதிலுரை

(5)

கரூர்-மேலமாயனூர், கட்டளை வழியாக பேருந்து தடத்தை இவ்வலுவலக இயக்கூர்தி ஆய்வாளர் ஆய்வு செய்ததில் கரூர்-திருச்சிராப்பள்ளி சாலையில் கட்டளைவரை 20 கிலோ மீட்டர் தார் சாலையெனவும், கட்டளை பிரிவிலிருந்து மேலமாய னூருக்கு செங்கநத் தூரம் வழியாக மொத்த தூரம் 3 கிலோ மீட்டர் எனவும், இந்த சாலை குண்டும், குழியுமாக இருப்பதல்லாமல் 2 பாலங்கள் இந்த சாலையில் மிக மோசமாக பழுதடைந்த நிலையில் உள்ள தாலும், இந்த 3 கிலோ மீட்டர்தூர சாலை பேருந்து இயக்க உகந்ததல்ல எனவும், இவ்வலுவலக இயக்கூர்தி ஆய்வாளர் தெரிவித்துள்ளார். மேற்கண்ட சாலை பேருந்து போக்குவரத்திற்கு ஏற்றவாறு சீரமைத்தபின்

துறையின் பதிலுரை.

(5)

பேருந்து விடுவது பற்றி பரிசீலிக்கப்படும். இருப்பினும் மேற்கண்ட சாலையை பேருந்து போக்குவரத்திற்கு ஏற்றவாறு சீர் செய்து நடவடிக்கை எடுக்க நெடுஞ்சாலை துறை கோட்ட பொறியாளருக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(வட்டார போக்குவரத்து அலுவலர், கரூர். அவர்களின் க. எண். அ2/51150/அ2/92 நாள் 18—1—1993).

குழுவின் பரிந்துரை.

(6)

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
45	4909	திரு. எஸ். அண்ணா ஆறுமுகம், மாவட்டப் பிரதிநிதி.	திருச்சி புதை வடிகால் திட்டம்–பஞ்சப்பூரில் கழிவு நீர்ப் பண்ணையில் பாதாள சாக்கடை கழிவு நீர் அதன் அருகிலுள்ள கோரையாற்றில் கலப்பது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கக் கோரி மனு

துறையின் பதிலுரை

(4)

திருச்சி நகராட்சி புதை வடிகால் திட்டத்தின்கீழ் திருச்சி பஞ்சப்பூர் கழிவு நீர்த் தொட்டியிலிருந்து வெளியேறும் அதிகப்படியான கழிவு நீரானது அருகிலுள்ள கோரையாற்றில் கலக்காமல் இருக்க தற்போது இந்நகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சுமார் 10 ஏக்கர் பரப்பளவில் புல் பண்ணை அமைக்கப்பட்டு கோ-1 புல் பயிர் செய்யப்பட்டு அக்கழிவு நீரானது புல் பண்ணை பராமரிப்பிற்கு பயன்படுத்தப்படுகின்றது. இது தவிர கூடுதலாக மேலும் 15 ஏக்கர் பரப்பளவில் புல் பயிரிடவும் இந்நகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[நகராட்சி ஆணையின் கடித எண். 019657/92/இ5, நாள் 1—12—1992.

குழுவின் பரிந்துரை.

(5)

கோரையாற்றில் கழிவுநீர் வாய்க்கால் கலக்காமல் இருக்கும்படி செய்யும் ஒரு திட்டத்தை செயல்படுத்துவதற்கு செலவாகும் என்பதால் அந்நீரைக் குடிப்பதற்கும் சமயலுக்கும் பயன்படுத்த வேண்டாம் என்றும் அந்தத் தண்ணீரைக் குடித்தால் ஆபத்து ஏற்படும் என்றும் கூறி விப்புப் பலகை ஒன்றை தமிழில் எழுதி அவ்விடத்தில் பொருத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
46	5081-எ	திரு. ஹெர். பஷிர், தலைவர், ராஜராஜன் நகர் நலசங்கம், (முன்னாள் திருஷ்ணமூர்த்தி நகர்) திருச்சிராப்பள்ளி-21.	ராஜராஜன் நகர் (முன்னாள் திருஷ்ணமூர்த்தி நகர்) மொத்தம் 151 வீட்டுமனைகளுக்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்டு அதன்படி 1981 முதல் 1983ம் ஆண்டு வரை குடியிருப்புகளுக்கு நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்டு பின்னர் நகர்ப்புற நில உச்சவரம்பு அலுவலகத்தில் ஆட்சேபிக்கப்பட்டுள்ளது. வீட்டுமனை குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரம் எல். பி. (டிடி) 14183ல் மனை எண்.

5க்கு மட்டும் நில உச்சவரம்பு அனுபவத்தால் ஆட்சேபம் இல்லையென தெரிவித்து இந்த மனைப்பிரிவுகளில் எல்லோரும் அரசாங்கத்திலோ, அரசாங்கத்தைச் சார்ந்த நிறுவனங்களிலோ பணிபுரிபவர்களாக இருப்பதால் நில உச்சவரம்பு ஆட்சேபணையை உடனடியாக விலக்கிக் கொள்ள கோரி.

குழுவின் பரிந்துரை
(6)

துறையின் பதிலுரை படித்து பதிவு செய்யப்பெறுகிறது.

தறையின் பதிலுரை
(5)

மனுதாரர் குறிப்பிட்டுள்ளபடி அனைத்து மனையிடங்களும் மனைப்பிரிவு அங்கிகாரம் அளிக்கப்பட்டவை. நகர்ப்புற நில வரி உதவி ஆணையர், திருச்சி அவர்கள் 11-3-1987 மற்றும் 12—2—1992ம் தேதிய கடிதங்களில் கடுமையாக ஆட்சேபனை செய்ததின் பேரில் கட்டிட அனுமதிநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எல்.பி.(டிடி) 14/83ன்படி மனை எண். 3 மற்றும் 5க்கு மட்டும் ஆட்சேபனை இல்லை என நில உச்சவரம்பு ஆணையர்; திருச்சி அவர்களிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. மனுதாரரும் நில உச்சவரம்பு அலுவலகத்தில் இருந்து இன்னும் குடியிருப்பு கட்டடங்கள் கட்ட அனுமதி அளிக்க தெரிவித்துள்ளனர். மேற்படி அலுவலகத்தில் இருந்து ஆட்சேபனை இல்லை என கடிதம் வரப்பெற்றவுடன் கட்டிட அனுமதி வழங்கப்படும் என பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

[நகராட்சி ஆணையர் அவர்களின் கடித எண். எப்.10/49632/92, நாள் 30—11—1992].

மனுவின் சுருக்கம்.

(4)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மனு எண். 4957, பாரதி நகர், அண்டகொண்டான், புது மாரியம்மன் கோவில் தெரு, மேட்டுத் தெரு ஆகிய பகுதிகளுக்கு கழிப்பிட வசதி செய்து தர கேட்கப்படுவது சம்மந்தமாக.

குழுவின் பரிந்துரை.
(6)

மனுவில் கூறியுள்ள இடத்தில் பொதுக் கழிப்பிடம் கட்ட தக்க இடத்தை மாவட்ட ஆட்சியர் உடனடியாக அளிக்க வேண்டும் என்றும், ஏற்கனவே கட்டியுடிக்கப்பட்டு. தண்ணீர் வசதி இல்லாத 5 கழிப்பிடங்களுக்கு தண்ணீர் வசதி உடனடியாக திறக்க வேண்டும் என்றும் அது குறித்து 15 நாட்களுக்குள் குழுவிற்கு அறிக்கை ஒன்றினை மாவட்ட ஆட்சியர் அனுப்பவேண்டும் என்று எதிர் பார்க்கிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)
47	4957	திரு. என். பீர்முகம்மது, 30-வது வட்டம், பூத் கமிட்டி, காங்கிரஸ் தலைவர், எண். 5/1, பாரதி நகர் தென்னூர் போஸ்ட், திருச்சிராப்பள்ளி-620017.

துறையின் பதிலுரை
(5)

மனுவில் கூறியுள்ள பகுதியில் பொதுக் கழிப்பிடம் கட்டுவதற்கு போதுமான தகுதி வாய்ந்த, இட வசதி இல்லை என்பதால் அங்கு பொதுக் கழிப்பிடம் கட்டப்படவில்லை இருப்பினும் தற்போது எல்லா குடியிருப்புகளுக்கும், ஹட்கோ கடன் உதவி மற்றும் அரசு மான்யத்தில் வீடுகளுக்கு குறைந்த செலவிலான நவீன கழிப்பறை கட்டும் திட்டம் இந்நகராட்சியில் விரைவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, இத்திட்டத்தின் கீழ் இப்பகுதியிலுள்ள அனைத்து குடியிருப்பு வீடுகளுக்கும் நவீன கழிப்பறை வசதி செய்து தரப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

(திருச்சிராப்பள்ளி நகராட்சி ஆணையர் அவர்களின் கடித [எண். இ3/49625/92, நாள் 9—12—1992).

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
48	4752	திருமதி போஜினி ரெங்கநாதன், டி.-50, 6வது குறுக்கு சாலை, வடகிழக்கு விஸ்தரிப்பு, தில்லை நகர், திருச்சி ராப்பள்ளி-18.	திருச்சி சிந்தாமணி நவீன பேருந்து நிலையம் அமைத்தல்—நிலம் கையகப்படுத்துதல்-நிலுவையாய் உள்ளது—தொடர்பாக.

துறையின் பதிலுரை.

(5)

சிந்தாமணி பேருந்து நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்ட நிலத்தினை, நில ஆர்ஜிதம் செய்ய கோட்டாட்சியருக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு, இந்த முன்மொழிவுகள் சில குறைபாடுகள் நிவர்த்தி செய்ய திரும்ப வரப்பட்டுள்ளது. நில அளவை செய்து குறிப்பிட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முன்மொழிவுகள் நகரளவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. முன்மொழிவுகளை ஒரு வார காலத்திற்குள் மீள கோட்டாட்சியருக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

குமுவின் பரிந்துரை.

(6)

ஆணையர் கூறியதை குமு ஏற்று, இன்னும் ஆறுமாத காலத்தில் நிலம் கையகப்படுத்தி நவீன பேருந்து நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்று குமு பரிந்துரை செய்கிறது.

[நகராட்சி ஆணையரின் கடித எண். எப்.2/49655/92, நாள் 30—11—1992.]

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
49	5049	வி. பூமிநாதன், தலைவர், பொன்மலை நகர காங்கிரஸ் கமிட்டி, 12, இந்திராகாந்தி மெயின்சாலை, காமராஜ்நகர் திருச்சிராப்பள்ளி-7.	பொன்மலை நகராட்சியில் உள்ள விமான நிலையத்தாருக்கு சொந்தமான இந்திராகாந்தி சாலை 60 அடி அகலம் 1743.2 மீட்டர் நீளம் உள்ள சாலையை நகராட்சி எடுத்து குண்டும், குழியும் உள்ள சாலையை சரிசெய்து தெரு விளக்கு அமைத்துத் தரும்படி பொன்மலை நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் அவர்கள் மனு செய்துள்ளார்கள்.

துறையின் பதிலுரை.

(5)

இந்திராகாந்தி மெயின்சாலை பொன்மலை நகராட்சி, எல்லைக் குட்பட்ட விமான நிலையத்திற்குச் சொந்தமானது. இந்த சாலையை நகராட்சியிடம் வருடம் ரூபாய் 1.00 க்கு 99 ஆண்டு கால குத்தகைக்கு எடுத்துக் கொள்ளும்படி விமான நிலையத்தார் தெரிவித்துள்ளார். சாலையில் உரிமை விமான நிலையத்தாரிடமும், பராமரிப்பு நகராட்சியிடமும் இருக்கும்படி. தெரிவித்த கடிதம் மற்றும் மாவட்ட ஆட்சியாளர் அவர்களின் பரிந்துரை கடிதத்தை மண்டல நிர்வாக இணை இயக்குநர் தஞ்சாவூருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மண்டல

குமுவின் பரிந்துரை.

(6)

துறையின் பதிலுரை படித்து பதிவு செய்யப்பெறுகிறது.

49

நிர்வாக இணை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் சிபாரிசு செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் உத்தரவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. உத்தரவு வந்தவுடன் துரித நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

[பொன்மலை நகராட்சி ஆணையரின் கடித எண். எப்.1/1727/85, நாள் 3—12—1992.]

வரிசை எண். (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம் (4)
56	4762	திரு. எஸ். ஷேக்மகபூப், 73-ஏ, தியாகி சுப்ரமணியர் தெரு, காமராஜ் நகர், விமான நிலையம், திருச்சிராப்பள்ளி-7.	திருச்சி வட்டம் காமராஜ் நகர் பகுதியில் பல இலட்சம் செலவு செய்து கட்டப்பட்ட உயர்மட்ட நீர்த் தேக்கத் தொட்டி உபயோகமற்ற நிலை ஏற்பட்டுள்ளது. ஏனைய பகுதிகளில் உள்ள தொட்டிகள் குடிநீர் வசதி செய்துதரப் பட்டும் காமராஜ்நகர் பகுதி குடிநீர் வசதி பிரச்சினைக்கு நடவடிக்கை எடுக்கக்கோருதல்.

துறையின் பதில்/உரை.
(5)

பொன்மலை நகராட்சியில் காவேரி கூட்டுக்குடிநீர்த் திட்டத்தின்கீழ் பொன்மலைப்பட்டி, சங்கிலியாண்டபுரம், சுந்தர்ராஜ் நகர் மற்றும் செம்பட்டு காமராஜ் நகர் ஆகிய நான்கு இடங்களில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு செம்பட்டு காமராஜ்நகர் பகுதி தவிர ஏனைய பகுதிகளில் 20 பொதுக் குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. ஆனால் செம்பட்டு காமராஜ்நகர் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு குடிநீர் ஏற்றுவதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் வேலைகள் நடைபெற்று வருகிறது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

குழுவின் பரிந்துரை.
(6)

ஆணையர் கூறியதை யொட்டி, இன்னும் இரண்டு மாத காலத்தில் குடி நீர் விநியோகப்பணிகள் செய்து முடிக்கப் பட்டுவிடும் என்று குழு நம்புகிறது.

[பொன்மலை நகராட்சி ஆணையரின் க. எண். இ1/5295/92/25, நாள் 25—11—1992.]

வரிசை எண் (1)	மனு எண் (2)	மனுதாரரின் பெயரும்முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
51	4649	திரு. திருவேங்கடம், சுப்பிரமணியபுரம் உபயோகிப்பாளர் குழு, 110, அருளாநந்தர் தெரு, சுப்ரமணியபுரம், திருச்சிராப்பள்ளி-20.	1. குடிநீர் குழாய் பதிக்கப்படாத பகுதிகளுக்கு உடனடியாகப் பதிக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்துதரக் கோரியது 2. கட்டி முடிக்கப்பட்ட தெருக்குழாய்களுக்கு இணைப்பு வழங்கவும் தெருக்குழாய்கள் கட்டப்படாத பகுதிகளுக்கும் தெருக்குழாய் அமைத்து இணைப்பு வழங்கக் கோரியது.

துறையின் பதிலுரை:

(5)

பொன்மலை நகராட்சியில் குடிநீர் விநியோகப் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நடை பெற்று வருகின்றது. இதன் தொடர்பாக அவர்களை அணுகியபோது மேற்படி குடிநீர்க் குழாய் அமைக்கும் திட்டம் திட்ட உருவாக்க அமைப்பிலேயே நகராட்சிக் குட்பட்ட அனைத்து தெருக்களுக்கும் குழாய் பதிக்க 71 மீட்டர் எடுத்துக் கொள்ளப்பட்டதாகவும், அதில் 41 மீட்டர் தூரம் நகராட்சிப் பகுதியில் குழாய் பதிக்கப்பட் டுள்ளதாகவும் எஞ்சிய பகுதிகளுக்கு குழாய் அமைக்க நிதி உதவி அரசிடம் பெறுவதற்கு கருத்துரு அனுப்பியுள்ள தாகவும், நிதி உதவி கிடைக்கப் பெற்றவுடன் நகராட் சிக்குட்பட்ட அனைத்து தெருக்களுக்கும் குழாய் பதிக்கும் பணி முடிவடையும் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள் என் பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் கட்டி முடிக்கப்பட்ட இணைப்புகளுக்கு குடிநீர் இணைப்பு விரைவில் வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார்கள் என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

[நகராட்சி ஆணையரின் க. எண். ந.க.இ1/5290/92, நாள் 11—12—1992.]

குழுவின் பரிந்துரை.

(6)

பொன்மலை நகராட்சி ஆணையர் கூறியதை குழு ஏற்றுக் கொண்டு காலையிலும் மாலையிலும் மக்களுக்கு லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்ய வேண்டும் என்றும் 1993ம் ஆண்டு டிசம்பர் திங்களுக்குள் குழாய்கள் பதிக்கப் பட்டு குடிநீர் விநியோகிக்கப்படவேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
		(2)	(3)	(4)
52	5070	திரு பி.எம். கனி, பொதுச் செயலாளர், நூற்றாண்டு விழாக் குழு, நகராட்சி நடுநிலைப்பள்ளி, மணப்பாறை.	திருச்சிராப்பள்ளி மாவட்டம் - மணப்பாறை நகராட்சி நடு நிலைப்பள்ளிக்கு விளையாட்டு மைதானம் ஒதுக்கீடு செய்து கொடுக்க வேண்டுதல் - தொடர்பாக.

துறையின் பதில்.

(5)

மணப்பாறை நகராட்சி எல்லையில் நகராட்சிக்கு சொந்த மான இடம், விளையாட்டு மைதானம் அமைக்கும் அள விற்கு இல்லாத காரணத்தால், நகராட்சி பூங்கா அருகில் உள்ள மோர்குளம் பகுதியை சாக்கடை கழிவு நீர் நீரோட் டத்திற்கு இடையூறு அற்ற வகையில் தரை மட்டத்தை உயர்த்தி விளையாட்டு மைதானம் அமைக்க மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக சம்பந்தப்பட்ட நிலத்தை பெற்று புதிய விளையாட்டு மைதானம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[நகராட்சி ஆணையரின் க.எண். 6842/92/இ1, நாள் 4—12—1992].

குழுவின் பரிந்துரை.

(6)

மாவட்ட ஆட்சியர் கூறியதையொட்டி, நகராட்சியின் இடத்தை சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினருடன் சேர்ந்து பார்வையிட்டு பதினைந்து நாட்களுக்குள் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுவிடும் என்று குழு நம்புகிறது.

வரிசை எண் (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
53	5036	அஃபிடார்ப் சங்க உறுப்பினர்கள், எஸ். வெள்ளாளப்பட்டி.	தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், சனப்பிரட்டி ஊராட்சி எஸ். வெள்ளாளப்பட்டி கிழக்கு வீதி, தென்பாகத்தில் ஒரு பொதுக் கழிப்பிடம் கட்டித் தரக்கோருவது.

துறையின் பதிலுரை.
(5)

தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், சனப்பிரட்டி ஊராட்சியைச் சேர்ந்த எஸ். வெள்ளாளப்பட்டி கிழக்கு வீதி தென்பாகத்தில் சுமார் 1000 மக்கள் தொகை உள்ளது இங்கு பொதுக் கழிப்பிட வசதி ஏதும் இல்லை. பொதுக் கழிப்பிடம் கட்ட ஊராட்சிக்கு சொந்தமான நிலம் உள்ளது. அதில் பெண்களுக்கு 6 அறைகள் கொண்ட கழிப்பிடமும் ஆண்களுக்கு 6 அறைகள் கொண்ட கழிப்பிடமும் கட்ட இட வசதியும், தண்ணீர் வசதியும் உள்ளது. இவ்விரு கழிப்பிடங்களும் கட்ட உத்தேசமாக தலா ரூ. 40,000 வீதம் ரூ. 80,000 நிதி தேவைப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பொதுநிதியில் நிதி இருப்பு இல்லாத தினால், அரசு நிதி ஒதுக்கீட்டின் கழிப்பிடம் கட்ட நட வடிக்கைகள் மேற் கொள்ள ஏதுவாகும் என பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

[தாந்தோணி ஊராட்சி ஒன்றிய ஆணையரின் கடித எண். ந.க.அ2/8661/92, நாள் 18—12—1992.]

குழுவின் பரிந்துரை.
(6)

மாவட்ட வளர்ச்சி அலுவலர் உறுதி மொழி அளித்தவாறு இந்தக் கோரிக்கை இந்த நிதி ஆண்டில் செய்து முடிக்கப் பட்டுவிடும் என்றும் தண்ணீர் வசதியில்லாத அந்த இடத் திற்கு தண்ணீர் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று குழு நம்புகிறது.

37

வரிசை எண் (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும் (3)	மனுவின் சுருக்கம் (4)
54	4833	திரு பி. ராமசாமி, ஆண்டிப்பட்டாகாடு, புங்கங்குழி (அஞ்சல்) அம்பாப்பூர் (வழி) அரியலூர் தாலுகா, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	சின்னப்பட்டாகாடு-ஓரியூர் சாலையை மேம்பர்டு செய்தல்.

துறையின் பதிலுரை.
(5)

சின்னப்பட்டாகாடு முதல் ஓரியூர் வரை ஊராட்சி சாலை மொத்தம் 5. கி.மீ. அதில் புங்கங்குழி முதல் ஓரியூர் வரை 1991-92 ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டத்தின் மூம் அரியலூர் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் ஜல்லி பரத்தப்பட்டுவிட்டது.

புங்கங்குழியிலிருந்து சின்னப்பட்டாக்காடு எல்லைவரை 1 கி.மீ. ஊராட்சி சாலை மண் சாலையாக உள்ளது. இதை ஜல்லி பரத்தி தார் சாலையாக மாற்றுவதற்கு இடையில் சிறு பாலங்களையும் சேர்த்து மொத்தம் 3 லட்சம் ரூபாய் தேவைப்படும். ஊராட்சி ஒன்றியத்தில் நிதி ஆதாரம்

குழுவின் பரிந்துரை.
(6)

அம்பலவர் கட்டளை - காமராசவல்லி சாலையில் செப்பனிடப்பட்டு, தார்சாலையிடப்பட்ட பகுதி மீதமுள்ள 4/4 முதல் 6/2 வரை உள்ள சாலைப்பணிக்கு மூன்று லட்சம் ரூபாய் தேவைப்படுகிறதுதென்று அரியலூர் ஊராட்சி ஒன்றிய ஆணையர் கூறியதை யொட்டி, அரசு இது குறித்த பணிக்கு அரியலூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு மூன்று லட்சம் ஒதுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

இல்லை. கண்டீக்குடி முதல் ஆண்டிப்பட்டாகாடு வரை 1992-93ம் ஆண்டு தன்னிறைவு திட்டத்தில் நெடுஞ் சாலை கிராமச் சாலைகள் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளுவதற்கு பரிசீலிக்கப்பட்டுள்ளதால் அதன் தொடர்ச்சி யான இந்த சாலையையும் மேற்படி துறையின் மூலம் மேம்படுத்தலாம்.

[அரியலூர் ஊராட்சி ஒன்றிய ஆணையரின் கடித எண். ந க. அ2/8304/92, நாள் 9—12—1992].

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டப்பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS